www.tamilarangam.net

# சர்வதேசதமிழர்

SARVADESA TAMILER

1998 JAN Vol.5,Nr.1






டாக்டர்.இளங்கம்பன்

வதேச தமிழர்கட்கு
ுவருட வாழ்த்துக்கள் !



ரசனிகாந்த்











யப்பானிலிருந்து
சங்கீதாவின் புதுவருடவாழ்த்து!

தமிழர்களை முன்னேற்றம்,ஐக்கியம் கருதி ஒன்றிணைக்கும் நோர்வே தமிழ்ச்சஞ்சிகை!
Norway Tamil magazine to co-ordinate the Tamils for advancement & solidarity!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

<u>குழந்தை-குடும்பஅமைச்சு</u>

## குடும்பபிரச்சனை உள்ளோரை உங்கட்கு தெரியுமா?

குடும்பபிரச்சனை உள்ளோரை உங்கட்கு தெரிந்தால், அவர்களை கிட்டவுள்ள குடும்பபாதுகாப்பு கந்தோரை தொடர்புகொள்ள சொல்லவும். பிரச்சனைகள் வளர்ந்து, நிலைமை மோசமாக உணரப்படுகையில், வேறு கோணத்திலிருந்து - முடிச்சுகளை- நோக்கும் வெளியார் ஒருவருடன் பேசுவது நல்லது.

### 1தை 1998இலிருந்து குடும்பபாதுகாப்பு கந்தோர்கள் பற்றிய புதியசட்டம்

நோர்வேயில் 62 குடும்பபாதுகாப்புகந்தோர்கள் உண்டு. அரைவாசி தேவாலயம் சார்ந்தவை, அரைவாசி பிராந்தியகொம்யூன் அல்லது கொம்யூன் சார்ந்தவை. சகல பிராந்தியங்களிலும் குடும்பபாதுகாப்பு கந்தோர்கள் உண்டு.
தை.1இலிருந்து பிராந்தியகொம்யூன்களே, குடும்ப பாதுகாப்பு சேவைக்கு பொறுப்பு.

### குடும்பபாதுகாப்பு கந்தோர்களை யார் பயன்படுத்தலாம்?

குடும்பபிரச்னையுள்ள தம்பதியர், கூடிவாழ்வோர், குழந்தை-பெற்றோர்-பிறர் தொடர்பான பிரச்னையுள்ள குடும்பங்கள், அவதிப்படும்நிலையிலுள்ள குடும்பங்கள், தனியாட்கள் பிராந்தியகொம்யூனில் உள்ள குடும்பபாதுகாப்பு கந்தோர்களை தொடர்பு கொள்ளவும்.

### குடும்பபாதுகாப்பு கந்தோர் என்ன வழங்க முடியும்?

தம்பதியர், குடும்பஉறவில் உண்டாகும், முரண்பாடுகள், சிக்கல்களை கையாள்தலும், ஆலோசனை வழங்கலும் குடும்பபாதுகாப்புகந்தோர் வேலை. பிரிந்துவாழல், விவாகரத்து கேள்விகட்கு விடை தரலும், பெற்றோர் சமரசம் குறித்தும் உதவல்.

மனிதர்களிடையேயுள்ள பிரச்சனையை தீர்க்கக் கூடிய கல்வி, அனுபவமுள்ளவர்கள் குடும்பபாதுகாப்புகந்தோர்களில் வேலைசெய்கிறார்கள். அவர்கட்கு இரகசியகாப்புகடமையும் உண்டு. இக்கந்தோர்களில் சமூகவியலாளர்கள், மனோவியலாளர்கள், மனோவைத்தியர்கள் தொழில்புரிகிறார்கள். குடும்பசிகிச்சையில் பலர் மேலதிககல்வி பெற்றும் உள்ளனர். தேவாலயகந்தோர்களும் போதகருடன் தொடர்பை ஏற்படுத்தி தரும்.

### உதவி இலவசம் , நீங்கள் நேரடியாகவே குடும்ப பாதுகாப்பு கந்தோரை தொடர்புறுக!

உங்கள் பிராந்திய தொலைபேசிக்கோவையில் தொலைபேசி எண்ணை அறியலாம். பிராந்திய கொம்யூனை தொடர்புகொண்டால் குடும்ப பாதுகாப்பு சேவை பற்றிய தகவல்பிரசுரம் பெறலாம்.

-அரச தகவல் சேவையால் வழங்கப்பட்டது. அ.1-98

BARNE- OG FAMILIEDEPARTEMENTET

# Kjenner du noen med samlivsproblemer?

Hvis du kjenner noen med samlivsproblemer, kan du be dem ta kontakt med nærmeste familievernkontor. Når problemene vokser og situasjonen oppleves som håpløs, kan det være godt å snakke med noen utenforstående som ser «knutene» fra en annen vinkel.

## Ny lov om familievernkontorer gjelder fra 1. januar 1998

Det fins 62 familievernkontorer i Norge. Halvparten er kirkelige og halvparten er fylkeskommunale eller kommunale. Det er familievernkontorer i alle fylker. Fra 1. januar har fylkeskommunen ansvaret for familieverntjenesten.

## Hvem kan bruke familievernkontoret?

Ektepar og samboere med samlivsproblemer, familier med problemer i forholdet barn, foreldre og andre personer, familier og enkeltpersoner som opplever at de er i en krisesituasjon, kan ta kontakt med familievernkontoret i fylket.

## Hva kan familievernkontoret tilby?

Familievernkontoret tilbyr rådgivning og behandling av konflikter og kriser i par- og familieforhold. Kontoret kan også svare på spørsmål om separasjon og skilsmisse og tilby foreldremekling.

De som jobber på familievernkontoret har utdanning og erfaring i å løse mellommenneskelige konflikter, og de har taushetsplikt. Ved kontorene er det tilsatt bl.a. sosionomer, psykologer og psykiatere. Mange har tilleggsutdanning i familieterapi. De kirkelige kontorene kan også formidle kontakt med en prest.

## Hjelpen er gratis, og du kan ta direkte kontakt med familievernkontoret

Telefonnummeret finner du i telefonkatalogen for ditt fylke. Ved å kontakte fylkeskommunen kan du få en informasjonsbrosjyre om familieverntjenesten.




Innrykket av Statens informasjonstjeneste A-1/98



அன்பான தமிழர்களே! சர்வதேசதமிழர்சஞ்சிகைக்கு சந்தாதந்து சேவைதொடர ஆதரவுதருக!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சர்வதேசதமிழர் சனநாயகத்தமிழர்களின் கொள்கைமுரசாக விளங்கும். வாசகர்கருத்துக்கள் மிகமிக வரவேற்கப்படும்! ஆக்கங்களை மீள்பிரசுரம் செய்மின் இச்சஞ்சிகையை குறிப்பிடுக!தங்கள் விமர்சனம்,ஆலோசனைகள் நமக்கு வழிகாட்டும்! ஆக்கங்கட்கு ஆக்கியோரே பொறுப்பு. திருத்திவெளியிட ஆசிரியருக்கு உரிமையுண்டு. முகவரி மாற்றத்தை உடன் தருக!

சர்வதேச தமிழர் 1998
தொகுதி: ௫ இல: 1

## தமிழர்களும் சந்திரிகாவும்!

சமாதான முறையில் தமிழர்கட்கு நட்புக்கரம் நீட்டுவேன்!அரசியல்தீர்வு காண்பேன்!என தமிழர் நம்பிக்கை, ஆதரவுடன் 62.5வீத வாக்குகளை பெற்று,மலையகமக்கள் முன்னணியின் ஒரேயொரு மேலதிக வாக்கால் பாராளுமன்றில் ஆட்சியையும்,பிடித்து பதவிக்கு வந்த இலங்கை அதிபர் விட்ட தவறுகளை பட்டியலே போட முடியும்.இன்னமும் காலம் கடந்து விடவில்லை.இருபக்கமும் அழியும் இளஞ்சந்ததியை காப்பாற்ற அவரால் முடியும்!அதற்குத்தேவை அரசியல் துணிவும்,அரசியல்தகுதியும் மட்டுமே. பரந்தநோக்கும்,தூரநோக்கும்கொண்ட சிங்களதலைவர்கள் இதுவரை இலங்கையில் பிறக்கவில்லை!,புத்தமதம் பொய்த்துவிட்டது! என்ற இருகருத்துக்களையும் முறியடிக்க உங்களால் இன்னமும் முடியும்! எப்படி முறியடிக்கலாம்? என்பதற்கு இதோ பதில்:

1.வடகிழக்கில் தமிழ்மக்கள் மத்தியில் கரைச்சல்தரும் சிங்களப்படையினரை வாபஸ்பெற்று காலவரையற்ற போர் நிறுத்தத்தை புலிகட்குஅறிவியுங்கள்.

2.சகலஅரசியல்கைதிகளையும் உடன் விடுதலைசெய்து இரக்கம் காட்டுக!

3.தடைமுகாம்கள்,வவுனியா போன்ற தடுப்புமுகாம்களை அகற்றுங்கள்.

4.கொழும்பு,உட்பட இலங்கையெங்கும்,சகல தமிழர்களையும் எதிரிகள் எனக்கருதி சோதனை,எனும்,பெயரில் சித்திரவதைசெய்வதை நிறுத்துங்கள்.

5.சமாதானத்துக்கான போர்! சுலோகத்தைகைவிட்டு,உண்மையான சமாதானத்துக்கு வழி! பற்றி சிந்தியுங்கள். வன்னிமுற்றுகையை நிறுத்துங்கள்!! புலிகள்ஆதரவு,சம்மதத்துடன் யாழ்–வவுனியா பாதையை திறவுங்கள்! உணவு,மருந்து,மக்கள் போக்குவரத்தை சகலபகுதிக்கும் சுமுகமாக்குக!

6.அமைச்சர்கள் தொண்டமான்,பீரிஸ், ரத்வத்தை,அஷ்ரப், மற்றும் நீலனும் தாங்களும் கொண்ட தூதுக்குழு விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை வடக்கில் சந்தித்து மேலும் அரசியல்பொதியை நீதியாக வழங்குவது பற்றி பேசி திருத்தம் செய்து ஒப்பந்தம் செய்யுங்கள்!

7.பயமற்ற சுதந்திரமான பா.தேர்தலை நடாத்தினால், மக்கள்கருத்தை,தெரிவை சகலரும் ஏற்றுக்கொள்ளுவர். இதுவே இலங்கையை அந்நியசக்திகளிடமிருந்தும், பேராபத்திலிருந்தும் காப்பாற்ற நீங்கள் செய்யும் கடமை! என உணர்ந்து உடன் செயல்படுக!!

## நோர்வே:<u>வருமானவரிதற்பிரகடனம் கழிவுகட்குரிய ஆலோசனைகள்!</u>

பல தமிழர்கள் வருமானவரி தற்பிரகடன விண்ணப்பத்தை சரியானமுறையில் நிரப்பாததாலும்,எளியவிண்ணப்பத்தை அனுப்புவதாலும்,தமக்கு கிட்டவேண்டிய,பல்லாயிரக்கணக்கான குரோணர் கழிவுகளை,பெறாமல்,தவறவிட்டுவிடுகிறார்கள்.அவர்கட்கு,உதவுமுகமாக முக்கிய ஆலோசனைகள் நோர்வேஜிய மொழியில் வெளியான பிரசுரத்திலிருந்து,கீழ் தரப்பட்டுள்ளது.

3.2.1அடிப்படைகழிவு:சம்பளம்,பென்சன்,சுகவீனபணம்,வேலையற்றோர்பணம் ஆகிய வருமானத்தின் 20 வீதம்! வருமானமுள்ள சகலர்க்குமுளது. குறைந்தது: 3700,–கூடியது: 31300,–

3.2.2 அடிப்படைகழிவைவிட கூடுதலாக,உண்மையானசெலவுகள்,வேலைகுறித்துஇருப்பின்(இடமாற்ற நட்டம், பாடஇலக்கியங்கள்,கணனி,கருவிகள், உபகரணம்,சீருடை,வீட்டுக்கந்தோர்) கூடியகழிவுபெற,ஆதாரம் சமர்ப்பிக்க!

3.2.7
தொழில்சம்பந்தமான,உள்நாட்டு,(வெளிநாட்டு) பிரயாணங்கட்கு ஏற்படும் உணவு,தங்குசெலவுக்கு,கழிவுள்ளது. கூடியது:280நாட்கள்வரை,:425,–குரோணர் வரை நாளாந்த உணவுசெலவாயும்,தங்குமிடசெலவு,ஆதாரமிருப்பினும் கழிக்கலாம்.

3.2.8–9
நாளாந்தம் தங்குமிடத்திலிருந்து வேலைக்குசெல்லும் பிரயாணசெலவு (மாதபயணசீட்டு,அல்லது கார்செலவு 1,95குரோ./ கிமீ, 230–280நாள், கப்பல் கடவைசெலவு, தடுப்புவழி–பணம், என்பனவற்றுடன், சொந்தவீட்டுக்கு (சனப்பதிவுகாரர்பதிவுப்படி)விஜயம்செய்தசெலவும் 6000,–க்கு மேற்படின் கழிவுண்டு.இதுபோல்,வேலையற்றோர்: தொழில்கந்தோர்–வீடு–சில பயிற்சி நெறிக்கு போக பிரயாண கழிவுண்டு.

3.2.10 இருபெற்றோரும் தொழில்புரியின்,அல்லது ஒருவர் வேலை செய்ய மற்றவர் படிப்பு, இயலாமை,வேறு தகுந்தகாரணத்தால் குழந்தைகளைப் பராமரிக்கமுடியாவிடின்:(1986ல்,அல்லது பின்பு பிறந்தபிள்ளைகள்)11வயதுக்குட்பட்ட குழந்தைகட்கு குழந்தை பாதுகாப்பு செலவுக்கு கழிவுண்டு. ஒரு குழந்தைக்கு:43வீதம்(கூடியது: 4000,–)பல,குழந்தைகட்கு: 53வீதம் (கூடியது: 5100,–) ஆதாரம்வழங்கின் ஒருகுழந்தைக்கு: கூடியது: 20000,– பலகுழந்தைகட்கு: கூடியது: 23900,– கு.பாதுகாப்பிடத்துக்கு அழைத்துச் செல்லும்,மேலதிகபிரயாணசெலவுக்கும் ஆதாரம் தரின் கழிவுண்டு.

3.2.11தொழிற்சங்கஅங்கத்துவத்துக்கு கட்டியபணம்,1800,–வரை கழிக்கலாம்

3.2.12 சகலவித,பென்சன்செலுத்துகையும் கழிக்கப்படலாம்.

3.2.16 தொழில்துறை,வர்த்தககணிப்பு, (படிவம்:அர்.எவ்.1189:நிரந்தரசொத்து வாடகை வருடகணிப்பில் நட்டம் இருப்பின் கழிக்கலாம்.

3.3.1கடனுக்கு,1997ல் கட்டிய வட்டிகளை(வங்கி,அரசகடன்கல்வி நிதியம், தனிப்பட்டவர்களிடம் செலுத்தியவட்டி :ஆதாரம் இருப்பின்) கழிக்கலாம்.

3.3.4.கூட்டுகுடியிருப்புகளில் கழிவுக்குரிய செலவுகளின் பங்கு,கம்பனியின் தரவினடிப்படையில் எழுதப்படலாம்.

3.3.5பென்சன்காப்புறுதி,பென்சன்சேமிப்புக்கு 30000,–க்கு கூடாதகழிவுண்டு.

3.3.6 வீடு,ஓய்வுநேரசொத்து,வேறு நிரந்தரசொத்துவிற்பனையில் ஏற்பட்ட இழப்புக்கு,28வீதகழிவுண்டு. வீடு 12மாதங்கட்குமேல்,சொந்தஉடமையாயும்,கடந்த 24மாதங்களில் 12மாதங்கள் நீங்கள்அங்கு,குடியிருந்தபின்,விற்றால் ஏற்படும் லாபத்துக்கு வரியில்லை. அதேபோல் இழப்புக்கும் கழிவில்லை. விற்பனை,விளம்பர,உறுதிஎழுதும்,செலவுகளும் கழிக்கப்படலாம்.

3.3.7இளைஞர்கட்கான வருமான கழிவு, ஆராய்ச்சிக்கான நன்கொடைகழிவு , வெளிநாட்டு தொழில்பெறுனருக்கான (தற்காலிகமான 4 வருடத்துக்கு மேற்படாத வதிவு)தராதர கழிவுண்டு. (6மாதத்துக்குகூட தற்காலிகவேலை செய்யும் வெளிநாட்டவர்க்கு, வரி செலுத்தும் கடமையுண்டு)

3.3.8 பங்குவிற்பனை இழப்புக்கழிவு. பங்குகளின் விற்பனையில் லாபம் வரின்,அதற்கு 28வீதவரிக்கடமையும், நட்டம்வரின் 28வீத கழிவும் உண்டு.

3.5 விசேடகழிவு:முதிர்ச்சி,இயலாமை, புனர்வாழ்வு,இலேசானஇயலாமை,பராமரிப்பு(5000,–ஒருவருக்கு:(வெளிநாட்டிலுள்ளோர் எனில் ஆதாரம் தருக!) ,அசாதாரண வருத்தசெலவுகட்கு (உ.ம்:பல்வருத்தசெலவு) கழிவுண்டு.

1.5.1-AMS:வரிவகுப்பு–2ஐ சார்ந்தவர்கட்கு 10000குரோணர் சேமிப்புக்கு, 1500குரோணர் கழிவும்,வரிவகுப்பு–1ஐ சார்ந்தவர்கட்கு 5000 குரோ.சேமிப்புக்கு 750குரோ.கழிவும் உண்டு.

1.5.2 BSU இளைஞர்சேமிப்பு 10000,–க்கு 20வீதகழிவுண்டு.

–வெளிநாட்டிலுள்ள பணம் வரிக்குரியது.வெ.சொத்துக்கு வரி,இங்கில்லை. வரிகுறைப்புக்கு,முறையீடுசெய்யலாம். (சகலதுக்கும் ஆதாரபிரதி இணைப்பது நலம்! மேலும் விளக்கம் வரிக்கந்தோரில் தெளிவாகப் பெறலாம்!)

இலங்கையின் சகல,தமிழ்அரசியல்கைதிகளையும் உலகமனச்சாட்சியின்,கைதிகளாக பிரகடனம் செய்கிறோம்!சகலஅமைப்புகள்,(சர்வதேசமன்னிப்புசபையுட்பட),பத்திரிகைகள் இப்படி பிரகடனம் செய்து,உலகமனச்சாட்சியையும்,இலங்கையின்,மனச்சாட்சியையும் தட்டிஎழுப்புக!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலாபநோக்கின்றி சேவைநோக்கில் ;பலரது அரசியல்,சமூக,சமய,கருத்துக்களைத்தாங்கிவரும் நடுநிலைச்சஞ்சிகை இது.
ஜனநாயகம்,மனிதஉரிமை,சுதந்திரம்,சமாதானம்,நீதியுடன் கூடிய தமிழர் முன்னேற்றம்,ஐக்கியம் கருதுவதே நம் பணி!
பன்னாட்டு,தமிழ்எழுத்தாளர்,கல்லூரி,பொது நூலகங்கள் ,அரசியல்கட்சிகள்,சங்கங்கள்,பத்திரிகைகட்கு இலவசசந்தா உண்டு.

# சர்வதேசதமிழர் சந்திப்பு களம்:

**அன்புள்ள ஆசிரியருக்கு,**

1991மார்கழியில் சில குறுமதிகொண்ட அரசியல்வாதிகள் திட்டமிட்டு நடத்திய தமிழர்க்கெதிரான காவிரிக்கலவரங்களில் தங்கள் இன்னுயிர்,உடமைகளை இழந்ததமிழர்கட்கு அஞ்சலி செலுத்தும்வகையிலும்,அந்தக்கொடுமை நாட்களை கறுப்புநாட்களாக அனுசரிக்கும்வகையிலும், கர்நாடகத்தமிழர் முன்னேற்றக்கழகம் 13.12.97, 9–13மணி வரை அமைதிப்போராட்டமொன்றை நடாத்தியது.ஏராளமான கழகத்தோழர்கள்,உலகநல்வாழ்வு கவனிப்பு மையத்தினர்.கிறிஸ்தவ ஐக்கியமுன்னணியினர்,தனித்தமிழ்இயக்கத்தினர்,மக்கள்உரிமைக்கழகத்தினர்,மாந்தநேயஅறப்பணிக்குழுவினர்,தமிழ்இஸ்லாமியநலச்சங்கத்தினர்,குடிசைவாழ்வோர்நலச்சங்கத்தினர்,என பலர் பங்கேற்ற நிகழ்ச்சியை க.த.மு.க. தலைவர்:பேராசிரியர் சி.இராமமூர்த்தி நிறைவுசெய்து வைத்தார்.கழகத்தலைமைநிலையசெயலர்:கவிஞர் க.கு.கருப்பையா காவிரிக்கலவரங்கள் தொடர்பாக ஒரு சோகக்கவிதையைப் படித்தார்.பங்கேற்ற அனைவர்க்கும் நிகழ்ச்சி வெற்றிகரமாகஅமைந்தமைக்கும் அரும்பணிபுரிந்தோர்க்கும் பொதுசெயலாளர்:ஆ.சி.விசுவநாதன் நன்றி தெரிவித்தார்.பின்பு கர்நாடகஆளுனர் மாளிகைக்கு சென்று,தலைவர்,செயலர்,துணைசெயலர் வழக்கறிஞர் மருதமுத்து,பொருளாளர் யேசுராசா ஆகியோர் மனுவொன்றை(மனுவில் 1. பாதிக்கப்பட்டதமிழர்க்கு நட்டஈடு 2.தமிழர்க்கு பாதுகாப்பு 3.அயல்மாநிலங்களுடன் நல்லுறவும்,புரிந்துணர்வும் தமிழர் விருப்பம் 4.நிற,மொழி,இன,சாதி வேறுபாடற்ற இயற்கைநீதியைமதித்து,அமைதி,வளத்தை கர்நாடகத்தில்பெருக்குவதே நம்நோக்கு) அளித்தனர். விடியும்போது விடியட்டும்! ஊதுகிற சங்கை ஊதிவிடு!!வியனுலகுன்னை வேண்டாப்போதும், வேண்டிய செயலை செய்துவிடு! மடியும்போது மடிவோம் என்று, வாழ்வை வீணாய்ப்போக்காதே! மடிவது நல்ல குறிக்கோட்காயின்,மண்ணில் இறந்தும் பெற்றுவிடு!!-**பொதுசெயலர்:ஆ.சி.விசுவநாதன், கர்நாடகதமிழர் மு.கழகம்**
Karnataka T. M. K., Nr.6,2.flr.,Chickbazaar Road Cross,Shivajinagar,Banglore-56051,India tel.91.44.80.6652824
Prof.C.Ramamurthy,773, 15th Main,Srinivasanagar 2nd Phase,Mysore Bank Colony,Banglore-50 tel.80.6697332
(க.த.மு.க.வுடன்,சர்வதேசதமிழர் நட்புறவு, ஒத்துழைப்பு, தகவல்–கருத்து பரிமாற்றத்தைமேற்கொள்ளும்!–ஆர்)

**பேரன்புக்கும், பெருமதிப்புக்குரிய ஆசிரியநண்ப,**

சர்வதேசதமிழர் தமிழகச்சிறப்பிதழ், பிற இதழ்கள் கண்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தேன்.இலங்கைமண்ணில் பிறந்து, இன்று நார்வேயில் வாழ்ந்துகொண்டும், சர்வதேசதமிழர் வாயிலாக உலகெங்கும் வாழும் தமிழர்களை கலை–இலக்கியம் மூலம் ஒன்றிணைக்கும் தங்களது உன்னதபணி மகத்தானது!இச்சீரிய முயற்சியில் ஏழைதாசன் முகவரியையும் வெளியிட்டு ஊக்கப்படுத்திஇருப்பது, உண்மையிலேயே தங்கள் உளப்பூர்வமானஆர்வத்தை காட்டுகிறது.தமிழர்களும் தமிழகமும் தலையங்ககட்டுரை தீர்க்கதரிசனமானது.அன்னைக்கு அஞ்சலியும் சிறப்பு! ஏழைதாசன்,மார்கழி 97 இதழில்,அட்டைப்படத்தில் தங்கள்படம் வெளியிட்டு,தாங்கள் பற்றியகட்டுரையும் பிரசுரித்து பெருமைப்படுத்தவுள்ளோம். நமது அன்பு நீடித்து நிலைத்து நிற்பதாக! என்றென்றும் அன்புடன்,
**எஸ்.விஜயகுமார்,** B.A.,Editor,Ealaidhason,26,Adappanvayal 8.st,Thirukokarnam-PO,Pudukottai.622002,India

**அன்புச்சகோதரர் அவர்களுக்கு,**

சகலர்க்கும் எல்லா நலங்களும் உண்டாக பழனியாண்டவரைப் பிரார்த்திக்கிறேன். நம் சர்வதேசதமிழர் இதழ் கண்டு மகிழ்ந்தேன்.வையத்தமிழர்கள் அனைவரின் நலம்நாடும் இதழாகவும், இணைப்புபாலமாகவும்,தமிழுறவை வளர்க்கும் அதன் அமைப்பும் அச்சும் அழகியமுறையில் உள்ளன.

ஒரு லட்சம் கவிதைகள் எழுதியநான் கைக்கூ கவிதைகள் ஆயிரம் எழுதியவன்.சர்வதேசதமிழர் உதவியால் இந்த கைக்கூ கவிதைகள் வெளிவர ஆசைப்படுகிறேன்.வையத்தமிழர் உதவியை நாடுகிறேன். என்னால்முடிந்தவரை (கவிதைகளும் நல்கி) நம் சர்வதேசதமிழர் இதழுக்கு உழைக்க காத்திருக்கிறேன்.
**அன்பகலா.............டாக்டர் இளங்கம்பன், சித்திரகூடம், பழனி . 624601, தமிழ்நாடு, இந்தியா**
(தமிழ்ஆர்வலரும், லண்டன்– இணைப்பாளருமான திருமதி. தவமணி மனோகரன் அவர்கள் தங்கள் கவிதை வெளியீட்டுக்கு உதவ விரும்புகிறார்.அவர் இது பற்றி தங்களுடன் தொடர்புகொள்வார்.வாழ்த்துக்கள்!–ஆர்)

**அன்புடையீர்,**

சர்வதேசதமிழர் இணைப்பாளர்கள்,எழுத்தாளர்கள்,வாசகர்கள்,தங்களுக்கும்–உலகத்தமிழ்அரங்கம்– பத்திரிகையின் சார்பில் இனியபுத்தாண்டு,பொங்கல்வாழ்த்துக்கள்! சர்வதேசதமிழர் கல்கத்தா சிறப்பிதழ் வெளியிட தங்கள் அனுமதியைக் கோருகிறேன்.-**பீம.சத்தியநாராயணன்,** 32,South Gangai Amman Kovil,1.st.,Nungambakkam R.S.,Choolaimedu PO,Chennai-600 094,India
(தமிழர்பேட்டிகள், தமிழுக்குசேவைசெய்வோர்,கல்கத்தா–தமிழர்–சங்கங்கள்–அரசியல்வாதிகள்–பற்றியவிபரங்கள் முகவரிகள்,புகைப்படங்களுடன் அருமையான சிறப்பிதழை சிறப்பாசிரியராக தயார்செய்து, அனுப்புங்கள்!ஆர்)

**அன்பின் ஆசிரியருக்கு,**

யாழ்.இந்துக்கல்லூரி பழையமாணவராகிய நாம்,எம் நன்றிக்கடனாக–சர்வதேசதமிழர்–யாழ்.இந்துசிறப்பிதழ்–வெளியிட்டு நம் கல்லூரியை பெருமைப்படுத்த எண்ணுகிறோம்.மாசி.98ல் யாழ்..செல்வதால் அதிபர்,ஆசிரியர்,மாணவர் பேட்டிகள், கல்லூரிவரலாறு, சிறந்தமாணவர், சிறந்தஆசிரியர், சிறந்தவிளையாட்டுவீரர்,உலகில் சிறந்துவிளங்கும் பழையமாணவர்,ஈழத்தில் சிறந்துவிளங்கிய,விளங்கும் பழையமாணவர்பற்றி எழுதஎண்ணுகிறோம்.ஆர்வமுள்ளோர் ஆக்கங்கள் அனுப்புக!-**அ.அருள்மோகன்,** Grostienv.34,4400Flekkefjord,Norway.tlf.38324530, mobil.91708285(யாழ்.இந்து சிறப்பிதழ் அ.அருள்மோகனை சிறப்பாசிரியராகக்கொண்டு சிறப்பாக வெளிவர உங்கள்ஆதரவை வேண்டுகிறோம்.இதேபோல் உங்கள் கல்லூரி,பல்கலைக்கழகம்,பாடசாலை,ஊர்,சங்கம்,அமைப்பு சிறப்பிதழ் செய்யவிரும்புவோர் தயவுசெய்துதொடர்புறுக!உலகமெலாம் தமிழ், தமிழரை அறியச்செய்வோம்.ஆர்)

கௌரவ சர்வதேச இணைப்பாளர்கள் / நல்லெண்ணத்தூதுவர்கள்:
நோர்வே:ஒஸ்லோ:தி.கிருபா.22.252141;கு.பாலதாஸ் 22.206327பேர்கன்:என்.ஜெயதரன்,றோயலா ,சிவகாந்தன் துரொண்கைம்: த.தியாகலிங்கம் ஸ்ரவங்கர்:அ.பாஸ்கரன்;முபாரக் அலி கிறிஸ்ரியன்சாண்ட்:ம.பஸ்ரியன் ஏகசுண்ட்:பொன்.சிவா; துறம்சோ: கே.சிவராஜா: வார்டோ:குகனெறியப்பன்;போர்லவோக்:ஐ.இரவீந்திரன் போட்ஸ்பியுட்:க.சுரேஷ்கரன் பிறத்வோக்: குமார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சர்வதேசதமிழருக்கு சந்தாதந்தோர்க்கு இதயபூர்வநன்றிகள்!மற்றையோர்தொடர்ந்து பெற விரும்பின் சந்தா தந்து ஆதரவு தருக !
உலக தமிழ்பத்திரிகை/சஞ்சிகைகள்,நூல்கள் மாற்றுத்திட்டத்தில் பங்குகொள்ளவிரும்பின் உங்கள்வெளியீட்டை அனுப்புக!
முகவரியுடன் அறிமுகமாகும்! சர்வதேச தமிழரையும் உங்கள் இதழில் முகவரியுடன் அறிமுகம் செய்ய மறக்கவேண்டாம் !

# அயலகத்துத் தமிழா கேள்

*கவிக்கொண்டால் மா. செங்குட்டுவன்.*

அயல் நாட்டில் வாழ்கின்ற தமிழா நீயும்
அந்நாட்டுக் குடிமகனாய் ஆதல் நன்றே!
நயமாக உனையொன்று கேட்கிறேன் நான்,
நமதன்னை மொழிதன்னை மறக்க லாமோ?
உயர்வாக அந்நாட்டைப் போற்றல் நன்றே!
உனதினத்தின் பண்பாட்டை இழக்கலாமோ?
பெயருக்கே தமிழனென வாழ்தல் நன்றோ?
பெருமைதான் சேர்த்திடுமோ எண்ணிப்
பாராய்

இந்நாட்டுச் செடியொன்றை எடுத்துச் சென்றே
இங்கிலாந்தில் நட்டாலும் பூவும் காயும்
அந்நாட்டுக் கேற்றாற்போல் மாறிப் போமோ?
அதன் மணமும் சுவையுந்தான் இழந்து
போமோ?

தென்னாட்டுத் தமிழன்தான் உணர்வு மங்கித்
திசைமாறி செல்கின்றான் என்ன சொல்வேன்?
அன்னைதரும் பாலோடு குழைந்து வந்த
அன்னைமொழி நாவில் வரத் தடைதான்
உண்டடோ?

தமிழ்மண்ணில் குடிபுகுந்த அயலா ரெல்லாம்
தாய்மொழியைப் பேசுதற்கு மறந்தா போனார்?
தமிழறிந்த போதிலும்தம் வீட்டில் என்றும்
தாய்மொழியே பேசுவதை மறந்த துண்டா?
தமிழனுக்கு மட்டும்ஏன் மறதி சொல்வாய்!
தமிழா நீ சிந்திப்பாய்;அயல கத்தில்
தமிழனாய் நீ வாழ்வதில்தான் பெருமை உண்டு;
தாய்மொழியைத் தாயாக மதித்துப் போற்று!

பிழைப்பதற்கே பிறநாடு சென்றா ரெல்லாம்
பிற இனமாய் மாறியதாய் வரலா றில்லை
உழைப்பதற்கே உன்முன்னோர் கப்பலேறி
உலகிலுள்ள பலநாடும் சென்ற டைந்தார்.
அழைத்துப்போய் அன்னோரைக் கூலியாக்கி
அந்தந்த நாடுகளைச் செழிக்கச் செய்தார்!
இழைத்திட்ட கொடுமையையும் தாங்கிக் கொண்டே
இன்று வரை அங்கேயே வாழுகின்றீர்.!

இனியேனும் நாம் தமிழர் என்னும் அந்த
இனவுணர்வை மொழியுணர்வைக்
கொள்வாய்; என்றும்
தனியினமாய் விளங்குகின்ற யூத ரைப்போல்
தனிப்பெருமை கொள்கின்ற சீன ரைப்போல
நனிபுகழ் நம் தமிழினமும் தரணி யெங்கும்
நற்றமிழர் நாகரிகம் பரப்பவேண்டும்;
கனித்தமிழை எல்லோரும் கற்க வேண்டும்;
கலைவளத்தைப் பண்பாட்டை நாட்ட
வேண்டும்.

தென்னாப்பிரிக்காவில் பீஜித் தீவில்
தென்கடலில் இருக்கின்ற மோரிஸ் தீவில்
இன்னும் பல வேறுதிசை நாட்டி லெல்லாம்
இருக்கின்றார் என்றமிழர் என்று சொல்லி
என்னினத்தார் பெருமையுடன் பேசு கின்றார்
என்றாலும் "தமிழறியாத் தமிழர்" என்னும்
அந்நிலையைப் போக்குதற்கே முயற்சி
செய்வாய்
அருந்தமிழில் வாய்மலர்ந்து இன்பம்
கொள்வாய்

இங்கிலாந்துப் பசுகூட 'அம்மா' என்றே
இனியதமிழ்ச் சொல்லெடுத்துக் கத்தும் அங்கே
பைங்கிளியும் அருந்தமிழில் 'அக்கா' என்றே
அழகாகக் கொஞ்சுமடா! தமிழா நீயும்
எங்கிருந்த போதிலுமே உனதில் லத்தில்
எழிலார்ந்த தாய்மொழியில் பேச லாமே!
தங்குதடை யில்லாது தமிழில் பேச
தமிழர்மா நாட்டினிலே உணர்வு கொள்வாய்!

நீ பெற்ற மழலையுடன் தமிழில் பேசு!
நினைக்கின்ற கருத்தையெல்லாம் தமிழில்
சொல்லு!
நீ கற்ற தமிழ் மொழியைப் பிறர்க்கும் கற்பி!
நின்முன்னோர் பிறந்த தமிழ்நாட்டை வந்து
நீ சுற்றிப் பார்ப்பதற்கே ஆவல் கொள்வாய்!
நின் சுற்றம் அனைவர்க்கும் எடுத்துச் சொல்வாய்!
நீ முற்றும் தமிழ் மகனாய் வாழ்ந்து காட்டு!
நின்பெருமை என்பெருமை என்றே கொள்வேன்.!

நன்றி : இரண்டாம் உலகத் தமிழர் மாநாட்டு மலர்.

பிரிட்டன்:டாக்டர்.செ.ஆனந்தவரதன்181.4270839;ந.பாலமுரளி181.4729336;திருமதி.த.மனோகரன்181.4713060;மு.ஆறுமுகம்
செ.நாகேந்திரன் 181.5532190கனடா:மா.மகிந்தன்;நியுசிலாந்த்:தி.திருநந்தகுமார்,சு.பாஸ்கரன்.பின்லாந்த்: இ.சிவலிங்கம் வி.சிவரூபன்
இந்தியா: சென்னை:பேராசிரியர்.வ.மாசிலாமணி/ அண்ணா பல்கலைக்கழகம்/44.23517233161;பேராசிரியர்.ஜ.இராமச்சந்திரன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நோர்வேயில் தமிழ்மாதசஞ்சிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.பதிவு இல:90/310-ரி.1.எஸ்.சர்வதேசதர தொடர்இலக்க நிலையம்
யுனெஸ்கோ,பாரீஸில் பதிவுசெய்யப்பட்டது.இல.0805-7443.கணணியால் பிழையின்றி எழுதிய ஆக்கம் உடன் பிரசுரமாகும்.
தரமான ஆக்கங்கள்(பேட்டி,கவிதை,சிறுகதை,கட்டுரை)புகைப்படங்கள், மாதாமாதம் அனுப்புவோர்க்கு இலவசசந்தா உண்டு.

## சர்வதேசதமிழர் கவியரங்கு

### கர்நாடகத் தமிழர்க்கு கண்ணீர் அஞ்சலி!

நீர்வற்றா காவிரியின்
நீங்காதப் பிரச்சனையால்
சோர்வின்றி உழைத்த
தூய தமிழர்களை
பார்போற்றும் அளவிற்கு
படைநடத்தி துன்புறுத்தி
சீர்கேட்டை குலைத்து
சித்தரித்த இந்நாளை......!

கருநாடகத் தமிழர்
முன்னேற்றக்கழகத்தினர்
வீரிட்டெழுந்து விரைவில்
கண்ணீர் அஞ்சலியை
பாராட்டும் அளவுக்கு
பக்குவமாய் செய்தார்கள்!
சீரழிந்து இறந்த
செந்தமிழ் மக்களுக்கு!

உயிரையும் உடமையையும்
உள்ளது அத்தனையும்
கையிலே இல்லாமல்
கலவரத்தால் பறிகொடுத்த
மெய்யான செய்திகளை
மேனிறுத்தி அரசுக்கு
தொய்விலா நிவாரணம்
வழங்கிடவும் கோரியுள்ளோம்!

எப்பொழுதும் தமிழருக்கு
பாதுகாப்பு அளித்திடவும்
தப்பாமல் இனவெறியன்
தலைதூக்கா காத்திடவும்
துப்பறியும் சூரியனே,
சுடரொளியால் சுட்டுவிடு!
செப்பமுடன் தமிழர்
சீரோடு வாழ்வதற்கு!

கலவரங்கள் ஏற்பட்டு
காவிரியின் பெயராலே
கல்லறைக்குச்சென்ற
என்தமிழ் மக்களுக்கு,
களைக்காமல் கருநாடகத்
தமிழர்முன்னேற்ற கழகத்தினர்
கண்ணீர் அஞ்சலியை
காணிக்கை யாக்குகின்றோம்!

**க.கு.கருப்பையா,எம்.ஏ,பி.எல்.**
**தலைமைநிலைய செயலர், கர்நாடக தமிழர் முன்னேற்றக்கழகம், பெங்களூர்**

### உலகத்தமிழினம் ஒன்றென்று சொல்வோம்......!

உலகத் தமிழினம்
ஒன்றென்று சொல்வோம்!
ஒன்றாகி நின்றேநாம்
அன்பினால் வெல்வோம்!
இலகும்நல் தமிழேநம்
உயிரென்று வாழ்வோம்!
இனிய தமிழ்த்தொண்டில்
நாளெல்லாம் ஆழ்வோம்!

யாதும்நம் நாடென்ற
மனமுற்ற போதும்
யாரும் நம் உறவாக
வாழ்ந்திட்டபோதும்
ஓதும் தமிழ்மக்கள்
ஓர்குலம் என்போம்!
உலகெல்லாம் நம்குலம்
உள்ளதாம் என்போம்!

வையப் பொதுமறை
எம்மறை என்போம்!
வாழ்க்கைநெறிமுறை
அவ்வழி என்போம்!
உய்வும் உயர்வும்
ஒண்டமி ழாலே
உலகத்தை வெல்வோம் நல்
உழைப்பொன்றினாலே!

**டாக்டர்.இளங்கம்பன்,பழனி**

### ஆளையாள் தின்பதே தான்!

எத்தனைஇதழ் வந்தென்ன?
எதை எவர் எழுதியென்ன?
அத்தனையும் கற்றென்ன?
அவைதனில் பரப்பியென்ன?
முத்தரத்துடன் படிக்கை
முடித்தென்ன?அழித்துமென்ன?
இத்தரை உய்யுமாமோ?
இனவாதம் மறையுமாமோ?

பறித்தவை பேசியென்ன?
பழையோரை ஏசியென்ன?
அறிவோடு வாழ்ந்துமென்ன?
ஆழமாய்ச் சிந்தித்தென்ன?
நெறியோடு நின்றுமென்ன?
நீதி,மெய் பார்த்துமென்ன?
வெறிமதம் வீழுமாமோ?
வெளி உல குதவுமாமோ?

கோலது நிமிர்ந்தாலன்றி
குடிமக்கள் விழித்தாலன்றி
வால்பிடி நின்றாலன்றி
வருபடை போனாலன்றி
நாலுநாடரைந்தா லன்றி
நல்லெண்ணம் வந்தாலன்றி
ஆளையாள் தின்ப தேதான்!
ஆண்டெலாம் தொடர்வதேதான்!

அடக்குதல் மனிதம் அன்று!
ஆரையும் ஆரும் தேய்த்து,
ஒடுக்குதல் மனிதம் அன்று!
மனிதரை மனிதர்போன்று,
நடக்கவைப் பதுவே நீதி!
நடக்குமா? நம்பலாமா?

**தாமரைத்தீவான்-லிங்கநகர்**
**அம்மன்கோவில் வீதி**
**திருகோணமலை, இலங்கை**

### காதல் மழை!

ஒவ்வொரு முறையும்
சந்திக்கும் பொழுதெல்லாம்
இயல்பான நேசம்
புலப்படாமல் என்
காதில் ஒலிக்கும்,
இதயம் பதிந்து
தடம் தவறாமல்
நடத்திச்செல்லும்!
ஒற்றைமைனா
கண்ணில்படுகையில்
உள்ளம் நடுங்குவேன்!
ஏளனச்சிரிப்பில்
உள்ளம் குளிரும்
நடுக்கம் மறையும்,
சிறுதூறலில்
உன்குடையினுள் ஒதுங்கி
நான் நடக்கையில்
விண்ணுக்கு
நன்றிசொல்வேன்!

**புதுச்சேரி ச.வேல்முருகன்**

### உறுதியோடு நீ இரு!

உன் வேட்டியை அண்ணன்
மாற்றிக் கட்டிக்கொள்ளலாம்,
உன் தலைவலிக்கு
தம்பி மாத்திரைஉண்ணமுடியாது!
அதுபோல் உன் தலையெழுத்தை
பெற்றோர் மாற்றமுடியாது
உன் கஷ்டங்களுக்கு
உறவைக் காரணம் காட்டாதே!
உறுதியோடு நீ இரு!
உலகம் புகழும் ஒருநாள்
உன்திறமை! மறந்துவிடாதே!

**ரூபியஸ் சுகுமார்-மாஸ்கோ**

### செவிடனின் எண்ணங்கள்......!

இந்த மனிதர்கட்கென்ன பைத்தியமா?
காலை தொடங்கி மாலைவரை
வாயினை ஆட்டுகிறார்கள்!வலிக்காதா
மேடையில் ஒருவர் வாய்,கையாட்ட
அவருகே சிலர்,வாத்தியங்கள் தட்ட,
ஊதுகின்றனர்!தடிகள் இழுக்கின்றனர்.
இந்தக்கூத்தினை பல்லாயிரம் மக்கள்,
வாய்மூடாது மெய்மறந்து கேட்கிறார்
இடையிடையே அனைவரும்
ஒரேசமயத்தில் கொசு தட்டுகின்றனர்!
ஓ!இது ஓர் பைத்தியக்கார உலகம்!

**ஜானகி.ராஜசுந்தரம்,பிரிட்டன்**

### மழை என்பது..................!

வானம் எனும் கௌரவ சபையில்
முகில்எனும்பாஞ்சாலியின்துகில்தனை
இடியெனும்,துச்சாதனன்,களைந்ததும்
காப்பாற்ற கண்ணன் வராததால்
முகில்பெண் வடிக்கும் கண்ணீரோ?

**இரா.இரவி.................மதுரை.1**
**தமிழ்நாடு**

திரைக்கலைஞர்பிரசாந்த்;சேலம்:இராசமாணிக்கம்திருச்சி: சிங்காரவேலன்,டாக்டர் சாந்தி மதுரை: இரா. இரவி:சு.இலக்குமணசுவாமி
புதுச்சேரி:ச.வேல்முருகன் கல்கத்தா: பி.சத்யநாராயணன்; டெல்லி:சுந்தரேசன்,ரவிராமானுசம்,கதிர்.சம்பத்குமார் கேரளா:சிவமணி
ச.வெள்ளிங்கிரி; டாக்டர்.லோகாம்பாள் சுந்தரம்,கைதராபாத்: என்.ஆர்.இலட்சுமணன்; பெங்களூர்:இரா.ப.முரளி,பாவலர்.ந.தமிழ்மறவன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டென்மார்க்:ச.யோகேந்திரம்;வ.க.பரமநாதன்; பிரான்ஸ்: பற்குணராசா,த.தர்மசீலன்1.43759171; இ.கிருபானந்தன், இ.கந்தசாமி
இலங்கை: கொழும்பு: வி.கங்கைவேணியன்41.684549 விதூரன்; கைதையூரான் குமரகுருபரன் ;சுகந்தி தில்லையம்பலம்
யாழ்ப்பாணம்:பி.ஹம்சானந்தி; மட்டக்களப்பு: க.சபாரத்தினம்; களுவாஞ்சிக்குடி: வி.காந்தகுமார்மாத்தளை: தவ.சஜிதரன்

# கேட்டீர்களா சேதி!

1.குடியேறியோர் இன்றேல் ஒஸ்லோ ஸ்தம்பித்துவிடும்! என ஒஸ்லோமாநகரமுதல்வர் பேர் டிற்லேவ் சிமொன்சன் நோர்வே தேசியபத்திரிகையான–ஆப்ரன்போஸ்ரன்–க்கு பேட்டி தந்து குடியேறியோரை பெருமைப்படுத்தியுள்ளார். ஒஸ்லோவில் குடியேறியோர்(ஒஸ்லோவில் தமிழர் சுமார் 3500பேர்)பங்கு பற்றி புள்ளிவிபரத்துடன் இப்பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது. வைத்தியர்,மருத்துவதாதியர்,பொறிமியலாளர் வெற்றிடங்கள், சுவீடன்,டென்மார்க், பின்லாந்த்,ஜேர்மனியிலிருந்து வருபவர்களால் நிரப்பப்படினும்,பிறதுறைகள் ஆசிய,ஆபிரிக்க,கிழக்குஐரோப்பிய, லத்தின்அமெரிக்க மக்களான குடியேறியோரால் திறமையாக செயற்படுவதாக பாராட்டப்பட்டுள்ளது.இதில் தமிழரின் பங்கும் குறிப்பிடத்தக்கதே!குடியேறியோர்அனைவரும் வேலைசெய்யாமல் வேலைநிறுத்தம் செய்தால் ஒஸ்லோ குழப்பத்தில் ஆழ்ந்துவிடும்!எனவும் கூறப்பட்டுள்ளது.
நிலக்கீழ்–ரயில்,டிராம்,டாக்சி ஓட்டுனர்களாகவும் (அதிகம் பாகிஸ்தானியரும், சிலதமிழரும்) சுத்திகரிப்பு, உணவு விடுதி, தபால்பிரிப்பு, பரிசாரகர், பிறசேவைதுறைகளிலும்(தமிழர் அதிகம்)குடியேறியோர்பங்கு அதிகமாகவுள்ளது. கட்டிட,நிர்மாண,எண்ணைதுறைகளில் வருடாந்தம் வெளிநாட்டிலிருந்து வேலைசெய்ய வருவோர் 15வீதத்தால் (சுவீடிஷ்,பிரிட்டிஷ்)அதிகரித்துள்ளனர்.(1997ல் 24000பேர்)
டாக்சி ஓடும் 5000பேரில் மூன்றிலொன்று பங்கு குடியேறியோர் ஆவர்.அல்நாப்ரு,தபால்பொதிபிரிவில் 575பேரில் 200பேர் குடியேறியோர்.ஒஸ்லோ தபால்மாவட்டத்தில் தொழில்புரிவோர் 7000பேரில் 10வீதம் குடியேறியோராவர். இங்கு நோர்வேமொழி பரீட்சை வைத்தே குடியேறியோர் வேலைக்கமர்த்தப்படுகின்றனர். சாஸ் ஹோட்டலில் பணிபுரியும் 280பேரில்,135பேர் குடியேறியோரே!தொழில்சங்கங்களில் பதிந்தோரில் 28வீத பரிசாரகர்,33வீதசமையல் காரர்,48வீத பிறதுறைமினர் குடியேறியோராவர்.ஒஸ்லோவில் வழங்கப்பட்ட 865 மதுவிற்பனை–அனுமதிகளில் 60வீதம் குடியேறியோர்க்கு வழங்கப்பட்டது. உலேவோல் வைத்தியசாலையில் 10வீதம் பிறநாட்டவராவர்.67 தேசி யஇனத்தவர் பணிபுரியும் இங்கு 80வீதமான சுத்திகரிப்போர் குடியேறியோராவர்.இ.எஸ்.எஸ்.சுத்திகரிப்புகம்பனியில் வேலைசெய்பவர்களில் 1000பேர் குடியேறியோராவர். 800பேர் ஒஸ்லோவில்மட்டும் பணிபுரிகிறார்கள்.ஆப்ரன்போஸ்ரன் பத்திரிகை விநியோகிக்கும் 3800பேரில்: 35–40வீதம் குடியேறியோராவர்,(ஒஸ்லோமத்தியில்விநியோகம்(35தேசிய இனத்தவர்)70–80வீதம் குடியேறியோராவர்.) ஸ்பூர்வையில்(மின்ரயில்நகரசேவை)2500பேரில்(40தே.இனம்) 20வீதம் குடியேறியோராவர். இவ்வாறு குடியேறியோரின் கடினஉழைப்பால் ஒஸ்லோ சிறப்புடன் விளங்குகிறது.
தமிழர்களாலும் பெருமையுறும் ஒஸ்லோமாநகருடன், சென்னை–முதல்வர் மு.க.ஸ்டாலின் ஒரு நட்புறவு,அபிவி ருத்தி ஒப்பந்தமொன்றுக்கு முயன்றாலென்ன?சிங்காரச்சென்னையாக்கும் பணியில் சர்வதேசதமிழரும் தன்பங்களி ப்பை (ஒஸ்லோ–சென்னை–நட்புறவுநகரங்கள் ஒப்பந்தம்உருவாக)செய்ய ஆவலாகவுள்ளது.தொடர்புக்கு:
H.E.Per Ditlev Simonsen,Mayor,Rådhuset,0037 Oslo,Norway.tlf.22.861600 fax.22.416076

2.வெளிநாட்டமைச்சு ராஜதந்திரசேவைக்கு பயிற்சியாளர்களை எடுக்கவுள்ளது. நோர்வேபிரசையான,30வயதுக்கு குறைந்த,பல்கலைக்கழகபட்டதாரிகள்,ஆங்கிலம் அல்லது பிரஞ்சு,ஜேர்மன்,ஸ்பானிஷ்,ரஷ்யமொழி ஏதாவது தகை மையுடன், பரீட்சைக்கும் தோற்றவேண்டும்.பெண்கள் விண்ணப்பிக்க ஊக்கப்படுத்தப்படுகின்றனர்.தகைமைவாய் ந்தவர்கள் விண்ணபித்துமுயற்சிசெய்யலாம். உரிய விண்ணப்பபடிவத்திலே விண்ணப்பிக்க! தெ.பே.22243111

3.நோர்வேயின் கோடீஸ்வரர்களில் ஒருவரான திறிக்வே கெஸ்னார்,தற்போதைய வரிமுறை சிக்கலான,அநீதியான, பொருத்தமற்றதாக இருப்பதால் 33வீதம் மட்டவரியும்,60000 அடிப்படைகழிவும் சகலருக்கும் கொண்டுவருவது நலம்!என தெரிவித்துள்ளார்.தன்னை அது பாதிப்பினும்கூட,அது முக்கியமானது என விவாதித்துள்ளார். மத்தியகட்சியின் நோர்வேநிதியமைச்சர்:குட்முண்ட் றெஸ்ராட் கடந்தவருடம் 35வீத மட்டவரியும்,1லட்சம் அடிப் படைக்கழிவும் தனிநபர்வருமானத்தில் விதிக்கலாம்!என ஆலோசனை கூறியது குறிப்பிடத்தக்கது. முதலீட்டு வருமானத்துக்கு தற்போதுவிதிக்கப்படும் 28வீதவரியையும் 33வீதமாக்கலாம் எனவும் கெஸ்னார் கூறினார்.

4.உலகசுகாதாரஅமைப்பின் இயக்குனர்நாயகமாக வரும்முயற்சியில் முன்னாள்பிரதமர் குறுகாலம் புறுண்லாந்த் ஓமான்,ஐ.அரபுகுடியரசு,பாஹ்ரயின்,இலங்கை,இந்தியா,யப்பான்,அல்ஜீரியா என 11நாடுகட்கு,விஜயம்செய்து 2மிலியன் குரோணர் செலவழித்ததை காளி காகன் கண்டித்து,இது பற்றி பாராளுமன்றில் பேசப்போவதாக கூறியுள்ளார். புதிய வெளிநாட்டமைச்சர் குனுட் வொல்லபெக் முடிவின்படி (191 நாடுகளில்,32நாடுகள் உ.சு.அமைப்பை நிர் வகிப்பதால்)தாம் பிரசாரம் செய்வது நோர்வேயின் நலன்கருதியே!எனக்கூறியுள்ளார்.அனைவர்க்கும் சுகாதாரம்! எனும் கொள்கையுள்ள உ.சு.அ. உலகில் 3600 சேவையாளர்களை கொண்டுள்ளது.

5.நோர்வே விமானத்துறைமினர் விமானகட்டுப்பாட்டுகோபுர அதிகாரிகளாகப்பணிபுரிய சுமார் 40பேர் பற்றாக்குறை யாக உள்ளதாக அறிவித்துள்ளனர். இத்துறைக்கு விண்ணப்பிப்போர்தொகை குறைவாகவே உள்ளதாம்.

6.ஐரோப்பியசமூகத்தில் சேர துருக்கியின்,மனிதஉரிமைமீறல்கள் காரணமாகக்காட்டப்படுவதால், மரணதண்டனை விதிப்பதை துருக்கி நீக்கியுள்ளது. இது உலகில் மரணதண்டனையை மனம்போனபடி விதிக்கும் சில தீவிரவாத இயக்கங்கட்கும் கொள்கைமாற்றம் ஏற்பட ஒரு உதாரணமாகக் காட்டப்படலாம்.

7.நாளாந்தம்,அரைமணிநேரம் ஓட்டம்,அல்லது மெல்லியஇசைநடனம் செய்வதே ஆரோக்கியத்துக்கு போதும், எனவும்,இதனால் இரத்தவோட்டம்கூடி காதுகேட்பதும் கூடும்!என ஒரு அமெரிக்கப் பேராசிரியர் விளக்கியுள்ளார்.

ரஷ்யா/மாஸ்கோ: முருகேசம்பிள்ளை ஆர்.சுகுமார் சவுதிஅராபியா/ அல்.கதிவ்: அ.நிக்சன் றியாட்: பி.யோகநாதன்
ஜித்தா:எஸ்.காளிதாஸ்துபாய்: நஜீர் முகமது.ஏ. பாஹ்ரெயின்:அப்துல்கனி; எம்.ஐ.ரபீக் ஓமான்:எஸ்.கண்ணன்.கணேசலிங்கம்
சுவீடன்:எம்.என்.பாலாஸ்; வ.சத்தியவான்; ஜேர்மனி:க.செந்தில்; த.புவனேந்திரன்: 023047439I; நெதர்லாந்த்: ஈசன் அருள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

### சிட்னிப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தில்

# சில வருடங்கள்...

பல்கலைக்கழகத்துக்குள் காலடி வைத்த நாள். எனது வாழ்க்கையின் புதியதோர் அத்தியாயத்தின் ஆரம்பம். புதிய அனுபவங்கள், பெரிய எதிர்பார்ப்புகள், பரிச்சயமில்லாத முகங்கள் எல்லாவற்றுக்கும் மேலாக பயம், படபடப்பு, சொல்லி உணர்த்த முடியாத ஓர் உணர்வு. இப்படித்தான் எனது முதல் நாள் பல்கலைக்கழக அனுபவம் அமைந்திருந்தது. எப்போ வரும் அந்த முதல் நாள் என்று முதல் நாள் முன்னிரவு வரை விழித்திருந்த நான் அந்த நாள் வந்தவுடன் முகம் வெளிறி நின்றதைக் கண்ட என் பெற்றோர் அறிவுரைகள் பல கூறி அனுப்பி வைத்தனர். போருக்குச் செல்லும் மகன் கண்களிலிருந்து மறையும் வரை வீட்டு வாசலில் பார்த்து நிற்கும் சங்ககாலத் தாயைப் போல் எனது அம்மாவும் என்னை அனுப்பிவிட்டுப் பார்த்துக் கொண்டு நின்றதைப் பார்த்த எனக்கு அப்போது சிரிப்பு வரவில்லை, மாறாக முதல் நாள் என்னைப் பாடசாலைக்கு அனுப்பியபோது போகாமல் அம்மாவின் சேலையைப் பிடித்துக் கொண்டு அடம்பிடித்ததைப் போல் இன்றும் பல்கலைக்கழகத்திற்குப் போகமாட்டேன் என்று அழலாம் போல் தோன்றியது. தன்மானம் தடைபோட்டது. ஒருவாறு புகையிரத நிலையத்தை அடைந்து ரயிலேறி Redfernல் இறங்கிப் பல்கலைக்கழக வளாகத்தினுள் புகுந்ததும் புதியதோர் துணிவு துளிர்விட்டது.

எப்படியும் இன்றைய ஒரு நாளைச் சமாளித்துவிடவேண்டும்.

புதிய மாணவர்களுக்கான வரவேற்புரை முடிந்ததும் உரிய இடத்தில் சென்று பாட அட்டவணையையும் மற்றைய தேவையான வேலைகளையும் செய்து முடித்துக் கொண்டு வீட்டிற்குப் போக ஆயத்தமான வேளை வரவேற்புரையின் போது பல்கலைக்கழகத்தில் இயங்கும் மாணவ அமைப்புக்கள் அமைத்துள்ள கூடாரங்கள் பற்றிச் சொன்னது ஞாபகம் வந்தது சிட்னிப் பல்கலைக் கழகத்தமிழ்ச்சங்கம் பற்றிப் பள்ளிக் காலத் தோழி ஒருத்தி சொல்லிக் கேள்விப்பட்டிருந்தேன். எனது அப்பாவின் நண்பர் ஒருவரும் எனக்கு சிட்னிப் பல்கலைகழகத்தில் அனுமதி கிடைத்துள்ளது என்பதைக் கேள்விப்பட்டவுடனேயே இந்தச் சங்கங்களில் சேர்ந்தால் படிப்பில் ஆர்வம் குறைந்துவிடும், ஆகவே அந்தப் பக்கம் போகக் கூடாது என்றும் எச்சரித்திருந்தார். செய்ய வேண்டாம் என்பதைச் செய்து பார்த்துவிடுவது எனது குணாதியங்களில் ஒன்றாக இருந்தபடியால் எப்படியும் தமிழ்ச் சங்கத்தினரைத் தேடிக்கண்டு பிடித்துவிட வேண்டும் என்று முடிவு கட்டினேன். அவை இருக்கும் இடத்தைக் நோக்கி நடக்கத் தொடங்கினேன்.

கூடாரங்களை அண்மித்ததும் தமிழ்ச் சங்கக் கூடாரத்தினைக் கண்டுபிடிப்பது அத்தனை கலபமல்ல என்பது விளங்கியது. வரிசை வரிசையாக ஐம்பதுக்கும் மேற்பட்ட கூடாரங்கள் காணப்பட்டன. ஒவ்வொரு கூடாரமும் பலவர்ணங்களினால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. நூற்றுக்கணக்கில் மாணவர்கள் அங்குமிங்குமாகக் கூடாரங்களின் முன் குழுமி நின்றதைப் பார்த்த போது நல்லூர்த் திருவிழாக் காலம் தான் நினைவிற்கு வந்தது. ஆனால் ஒரு வித்தியாசம், அங்கு பார்த்தவர்கள் அனைவருமே ஒரே நிறத்தவர்கள், ஒரே மொழியைப் பேசினார்கள். ஆனால் இங்கோ நிறத்தால், மதத்தால், மொழியால் வேறுபட்ட உலகின் பலபாகங்களைச் சேர்ந்தவர்களைக் காண முடிந்தது. பாடசாலை என்ற சிறிய வட்டத்தின் கூட்டுப் பறவையாக இருந்த நான் பரந்த உலகிற்குள் திறந்து விடப்பட்டதை அன்று உணர்ந்து கொண்டேன்.

ஒவ்வொரு வரிசையாகத் தமிழ்ச் சங்கக் கூடாரத்தைத் தேடிக்கொண்டே நடக்கத் தொடங்கினேன். இரண்டாவது வரிசையில் திரும்பிய போது சிட்னிப் பல்கலைக்கழக தமிழ்ச் சங்கம் என்று பொறிக்கப்பட்டிருந்த துணி காற்றில் படபடப்பது தெரிந்தது. எனது நெஞ்சம் படபட என்று அடித்துக் கொண்டது. காரணம் புரியாத படபடப்பும் பயமும் வந்த வேகத்தில் திரும்பிச் சென்று விட்டேன். நான் செய்ததை நினைத்து வெட்கப்பட்டுக் கொண்டே வீட்டைச் சென்றடைந்தேன். எப்படியும் அடுத்த நாள் தமிழ்ச் சங்கக் கூடாரத்துக்குள் நுழைந்துவிடுவது என்று தீர்மானமும் செய்து கொண்டேன்.

இரண்டாவது நாள்! பல்கலைக்கழகத்திற்குச் சென்றேன். முதல் நாள் போல் நெஞ்சு படபடக்கவும் இல்லை, நான் பயப்படவும் இல்லை. முதல் நாளே மற்றைய வேலைகளை எல்லாம் முடித்திருந்ததால் அன்று நேராகத் தமிழ்ச் சங்கக் கூடாரத்தை நோக்கி நடக்கத் தொடங்கினேன். தூரத்திலேயே பலர் கூடாரத்தினுள் நின்றது தெரிந்தது. அருகில் செல்லச் செல்ல பழைய படபடப்பு, கால்கள் பின்னிக் கொள்வதைப் போலொரு உணர்வு நானாகச் சென்று எப்படி அறிமுகம் செய்து கொள்வது என்று ஒரு தயக்கம், கூடாரத்தில் நின்ற அத்தனை பேரும் என்னையே பார்ப்பது போல் ஓர் உணர்வு. கூடாரத்திலிருந்து ஒருவர் என்னை நோக்கி வருவது தெரிந்தது. வந்தவர் என்னைப் பார்த்து நீர் தமிழா என்றும், தமிழ்ச் சங்கத்தில் சேரவிருப்பமா என்றும் கேட்டார், எனக்கோ வந்த வேலை கலபமாக முடிந்து விட்ட சந்தோசம்.

கூடாரத்திற்கு வெளியில் நின்றபடியே அங்கத்தவர் ஆவதற்கான பத்திரத்தை நிரப்பத்தொடங்கினேன். அங்கு நின்ற அனைவரும் ஒன்றன் பின் ஒன்றாக பல கேள்விகளைக் கேட்டபடியே நின்றார்கள். அவர்களின் கேள்விகளுக்குப் பதில் கூறியபடியே பத்திரத்தை நிரப்பி அவர்களிடம் கொடுத்தேன். அதன் பின்னரும் அங்கேயே நிற்பதா அல்லது திரும்பிப்போய்விடுவதா என நான் யோசித்துக்கொண்டிருந்த போது என்னையும் கூடாரத்தினுள் வரும்படி அழைத்து அங்கிருந்த எல்லோருக்கும் என்னை அறிமுகப்படுத்தி வைத்தனர். கூடாரத்தினுள் நுழைந்த மறுகணமே நானும் அவர்களில் ஒருவராகி விட்டதைப் போல தோன்றியது. அத்தனை நட்புடன் அங்கிருந்த அனைவரும் பழகினர். இவ்வாறுதான் நான் சிட்னிப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தில் அங்கத்தவரானேன்.

பல்கலைக்கழக ஆரம்ப நாட்களில் தன்னந்தனியே காட்டிற்குள் நிற்பதுபோல் உணர்வு எனக்கு அடிக்கடி ஏற்படும்.

## கௌஷல்யா சுந்தரலிங்கம்



திருகோணமலை:மதுமாரி தாமரைத்தீவான்கண்டி: எஸ் மயில்வேந்தன்; இராகனகரத்தினம் அட்டன்:பா.சங்குப்பிள்ளை;
குவைத்:முகமதுகவுஸ்; வி.எம்.லிங்கன்; கவிற்சலாந்த்:மமனோகரன் அமெரிக்கா: செ.பாஸ்கரன்; அவுஸ்திரேலியா: பவளம்.பத்மா
ஞானப்பிரகாசம் தென்கொரியா:ஏ.யு.எல்.ஏ.ஹில்மி பிஜி:ச.சச்சிதானந்தம் தென்ஆபிரிக்கா:செல்வன்பிள்ளை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அப்போதெல்லாம் தமிழ்ச் சங்க நண்பர் ஒருவரைக் கண்டு சில நிமிடம் கதைத்தாலே தனிமை உணர்வு பறந்து விடும். விரிவுரை நடக்கும் இடங்களைத் தேடி அலையும் நேரங்களில் அவர்கள் வழிகாட்டுவார்கள். விரிவுரைப் பாடக்குறிப்புகள் விளங்காத பட்சத்தில் அவர்கள் விளக்கமளிப்பார்கள். பரீட்சை வினாத்தாள்களையும் தங்கள் விரிவுரைக்குறிப்புகளையும் (Lecture notes) தந்தார்கள். இவ்வாறாக தமிழ்ச் சங்கத்தினருடன் என் நட்பு சிறிது சிறிதாக வளரத் தொடங்கியது.

அந்த வருடம் நடந்த வருடாந்தப் பொதுக்கூட்டத்தின் போது அடுத்து வரும் ஆண்டுக்கான நிர்வாகக் குழு தெரிந்தெடுக்கப்பட்டபோது என்னையும் ஒருவராகத் தேர்ந்தெடுத்துப் பொறுப்பான வேலையையும் தந்தார்கள். தமிழுக்குச் சேவை செய்யும் நோக்குடன் இயங்கிவரும் இத்தமிழ்ச் சங்கத்தின் ஒவ்வொரு செயற்திட்டமும் எனக்குப் பெருவியப்பாக இருந்தது. வருடாந்தம் நடாத்தப்படும் தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள், காலாண்டு சஞ்சிகையான கலப்பை வெளியீடு, யூனிபண்ட் (Unifund) நிதியுதவித் திட்டம் ஆகிய மூன்று உபகுழுக்களின் நடவடிக்கைகளில் நானும் பங்கேற்கத் தொடங்கினேன். இவையெல்லாம் "என்னாலும் சில காரியங்களைச் செய்ய முடியும்" என்ற தன்னம்பிக்கையை என்னுள் வளர்ப்பனவாக அமைந்தன. தானாகச் செயற்படும் தன்மை, முன்னரே யோசித்து ஒழுங்கு முறையில் ஒரு காரியத்தை கச்சிதமாகச் செயலாற்றும் திறன், பயமின்றிப் புதியவர்களுடன் பேசிச் சகஜமாகப் பழகும் ஆற்றல், தேவையானதைப் பெற்றுக்கொள்ளும் ஆற்றல், எதையும் சாதிக்க முடியும் என்ற துணிவு சிறிது சிறிதாக என்னுள் வளரத்தொடங்கியது.

வேடிக்கை விளையாட்டுகளுக்கு தமிழ்ச்சங்கத்தில் பஞ்சமில்லை. மாதமொரு முறை நடக்கும் நிர்வாகக் குழுக் கூட்டங்களின் போது மணிக்கணக்கில் அரட்டையடிப்போம். பல்கலைக்கழகத்தின் wentwourth கட்டடத்தின் முதலாம் மாடி தமிழ் மாணவர்களின் அரட்டைக்குப் பெயர் போன இடம். வருடம் ஒரு முறை கோடை விடுமுறையின்போது தமிழ்ச் சங்கம் ஒழுங்கு செய்யும் சுற்றுப்பிரயாணத்திற்காகவே அந்த முழுவருடமும் காத்திருப்போம். எங்கே போகின்றோம் என்பது பற்றி யாரும் கவலைப்படுவதில்லை. நாங்கள் எல்லோரும் ஒன்றாகப் போகின்றோம் என்பதுதான் எல்லோருக்கும் முக்கியமாகப்படும். ஏனெனில் சிட்னிப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்க அங்கத்தினர் எங்கே இருந்தாலும் அங்கு சிரிப்புக்கும் கும்மாளத்திற்கும் குறைவேயிருக்காது. பிரயாணத்தை ஆரம்பித்தவுடனேயே வாகனங்களில் கைதட்டும், பாட்டும் ஆரம்பித்துவிடும். வீடு வந்து சேரும் வரை அந்தச் சத்தம் நிற்காது. அதற்கு எத்தனைநாட்கள் ஆனாலும் சரி போகும் இடங்களில் இரவுநேரங்களிற் கூட ஓய்வு கிடையாது. ஒரே அரட்டைதான். வீட்டிற்குத் திரும்பும்போது அரைவாசிப் பேருக்கு கதைக்கக் கூட முடியாது. அடித்த அரட்டை காரணமாக தொண்டை கட்டிவிடும்.

எமது சங்கத்தில் இசை, நடனம், நாடகம் எனப் பல்வேறு துறையில் ஆற்றலுடைய பலர் இருக்கிறார்கள். இவர்களின் முயற்சியில் தயாரிக்கப்பட்ட கலைநிகழ்ச்சிகள் சிட்னி மேடைகளில் அரங்கேறியிருக்கின்றன. இந்த நிகழ்ச்சிகளுக்கான பயிற்சிகளை மேற்கொள்ளும் போது நடை பெறும் நிகழ்வுகள் மிகச் சுவாரசியமானவை. குறித்த நேரத்தில் எல்லோரும் வந்து கூடுவது பெரிய குறைபாடு. அப்படி எல்லோரும் குறித்த நேரத்தில் வந்து சேர்ந்தால் அது உலக அதிசயம் தான். பிந்தி வருபவர்கள் என்ற காரணத்திற்காக , வழமையான நேரத்திலும் ஒரு மணி நேரம் முந்தி தொடங்கப்படும் எனச் சொல்லிவிடுவோம். என்றும் இல்லாத அதிசயமாக அவர்கள் அன்று மட்டும் சொன்ன நேரத்திற்கு வந்து ஒருமணிநேரம் காத்திருக்க, வழமையாக நேரத்திற்கு வருபவர்கள் அன்று மட்டும் தாமதமாக வருவார்கள். இதனால் எம்மிடையே சின்னச் சின்ன சண்டைகள் வருவது வழக்கம். வந்த சண்டைகள் வந்த வேகத்தில் மறைந்து விட பழையபடி வேடிக்கைப் பேச்சுகளில் ஈடுபட்டு விடுவோம். பரீட்சைக்கு கடைசி நிமிடத்தில் படித்துப் பழக்கப்பட்டதாலோ என்னவோ, நாடகப்பயிற்சியைக் கூட பல நாட்களுக்கு முன் ஆரம்பித்தாலும் கூட, கடைசி இரு தினங்களிற்தான் முறையாகச் செய்வோம்.

இவ்வாறாக சங்கத்தில் ஒருத்தியாக எனக்கு ஏற்பட்ட இனிமையான அனுபவங்கள் அத்தனையையும் சொல்லில் வடிக்கவும் முடியாது, சொல்லி விளக்கவும் முடியாது. அனுபவித்தால் மட்டுமே அறிந்து கொள்ள முடியும். இவ்வாறாக என் வாழ்க்கைப் புத்தகத்தின் பல்கலைக்கழக நாட்களை ஒரு வசந்தமாக்கிய சிட்னிப் பல்கலைக்கழ தமிழ்ச் சங்கத்தின் நினைவு பசுமரத்து ஆணிபோல் என்றும் என் எண்ணத்தில் நிறைந்திருக்கும்.

*கலப்பை* ஆடி 1997

---


மனித மனத்தை உழுகின்ற
"*கலப்பை*"
உலகத் தமிழர்தம் உணர்வை
உயர்த்தி நிற்கும்

"*கலப்பை*", சிட்னி
பல்கலைக்கழகத்
தமிழ்ச் சங்கத்தின்
காலாண்டுச் சஞ்சிகை

தனிப்பிரதி .- Aus. $2.50
ஆண்டுச்சந்தா
உள்நாடு :- Aus. $10.00
வெளிநாடு :- Aus. $20.00
பிரசுரிக்கப்படாத படைப்புகளைத்
திரும்பப் பெற இயலாது.
ஆசிரியர் குழுவுடன் தொடர்பு கொள்ள
செல்வன். நேசராஜா பாக்கியநாதன்
Tele: (02) 9622 2337
செல்வி. சாந்தினி கிருஷ்ண சர்மா
Tele: (02) 9743 6207
"Kalappai"
Sydney University Tamil Society
P.O Box 40, Wentworth Bldg.,
University of Sydney, NSW 2006
AUSTRALIA
*Email:*
pkethesw@extro.ucc.su.oz.au



Det Felles Inndrerråd i Hordaland
postboks 172
5001 BERGEN
Tlf./fax 55 31 18 95
Besøksadresse: BIKS
Olav Kyrresgt. 28
5015 BERGEN


**Innvandrerråd - info**

Innvandrerrådinfo har som målsetting:

- å informere innvandrere, politikere og aktuelle byråkrater om innvandrernes levekår i Norge
- å bidra til å skape bedre forståelse mellom innvandrere og nordmenn
- å være et kontaktforum mellom innvandrere og nordmenn.

Redaktør:
Suthahar Kumarasamy

★ சிற்றிதழ்ச்செய்தி ஆய்விதழ்





www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மூடங்கள்....காரையூரான் இ.தியாகலிங்கம்

நான் என்னைத் தயார்படுத்திக் கொண்டேன். என்பிள்ளையைப் பிரசவிப்பதற்குத் தயாரானேன்.

யுத்தம் எங்களைச் சூழ்ந்திருந்தபோது ஒரு திங்கள் வினி பிறந்தாள். மாட்டு வண்டியிலே வைத்தியசாலைக்குப் போகவேண்டிய அவலம். வயிற்றை குத்திய வேதனையோடு பள்ளம் திட்டியில் வண்டி ஏறி விழுந்ததால் ஏற்பட்ட அவஸ்தை. எப்போது எங்கே பொம்பரோ? ஷெல்லோ? புரியாத அவஸ்தை. இத்தனைக்கும் இடையே வினி பிறந்தாள். நல்லாய் இருந்தாள்.

இவள் பிறந்தபோது யுத்தம் மும்மரமாக நடந்து கொண்டு இருந்தது. மருந்துப்பொருட்கட்குத் தட்டுப்பாடாயிற்று. வினிக்குத் தடுப்பூசி போடவில்லை. சண்டை நீடித்ததால் அந்த எண்ணமே மறந்து போய்விட்டது. வினிக்கு ஒன்றரை வயது இருக்கும் போதுதான் அவளுக்கு போலியோ தாக்கியது. எனக்கு உயிரே போய்விடும் போல இருந்தது. கடைசிவரையும் போராடி அவளின் கால்களைக் காப்பாற்ற முடியாமல் போய் விட்டது. பட்ட காலே படும் என்பது சரியாய் இருந்தது. நான் பட்டுக் கொண்டே இருந்தேன். வினிக்கு இரண்டு கால்களும் சூம்பிப் போய்விட்டது. என்னால் கொஞ்சக்காலம் நடைப்பிணமாகவே உலாவ முடிந்தது. பின்பும் விவேகானந்தரின் புத்தகமே உதவியது. கடமையைச் செய்யென உந்தித் தள்ளியது. நான் எல்லாக் கவலைகளையும் உதறித் தள்ளிவிட்டதாய் எண்ணிக் கொண்டு எனது கடமையைச் செய்யத் தொடங்கினேன்.

திடீரென்று இங்கிலாந்தில் வசித்த அண்ணன் ஊருக்கு வந்தான். எத்தனை வருடம் என்றாலும் சகோதரபாசம் அவனை மிகவும் வாட்டி இருக்க வேண்டும். என்னைக் கையோடே கொழும்பு கொண்டு வந்து ஏதோ செய்து எப்படியோ இங்கு அனுப்பி வைத்தான். அவன் செய்தது பெரிய உதவிதான். வினிக்கு ஊரில் இருந்தால் இவ்வளவு உதவிகள் கிடைத்திருக்காது. யுத்தத்தின் நடுவே கால்கள் இயலாத இந்தக் குழந்தையை வைத்துக் கொண்டு அல்லாட வேண்டி வந்திருக்கும். அண்ணனை நான் மறக்க முடியாது. அவனுக்கு நான் எப்போதும் கடமைப்பட்டவள்தான்.

ஆ.....நேரம் இரண்டரையாச்சு. நான் என்னுடைய பழைய ஞாபகங்களில் மூழ்கிவிட்டதால் இந்த உலகையே மறந்து போய்விட்டேன். போய் வினியைக் கூட்டி வரவேண்டும். சமைப்பதற்கு பாவிக்கும் உடைகளைக் களைந்துவிட்டு வெளியே போவதற்கான உடையை அணிந்து கொண்டு காரை நோக்கி நான் ஓடுகிறேன்.

## 3 தனு

தனுவுக்கு என்னைவிட ஒன்று அல்லது இரண்டு வயது கூடுதலாக இருக்கும் . வெள்ளி . சனியென்றால் பயமாக இருக்கிறது. தனுவின் பெண்டாட்டிக்கும் இதே பயம்தான். தனு குடித்துவிட்டு போடும் கொட்டம் இந்தக் கட்டடத்தில் உள்ள அனைவருக்கும் அச்சுறுத்தலாக இருக்கிறது. பலருக்கு அச்சுறுத்தலாக இருந்தாலும் அவர்கள் பொருட்படுத்துவதில்லை. இங்கு வெறிகாறருக்கு எதிராக காவலர்களும் ஒன்றும் செய்து விட முடியாது. தனு அப்படி ஒன்றும் செய்வதில்லை. எதிர்படுபவர்களை தனது கீழ்த்தரமான வார்த்தைகளால் நோகடிப்பான். குடிக்காதபோது பதுமையாகச் செல்லும் இவன் , குடித்தபின்பு

மற்றைய மனங்களையெல்லாம் நோகடிக்கும் மிருகம் ஆகிவிடுகிறான். மது அவனை மிருகமாக்குவது புரிந்தும் அவன் அதில் இருந்து விடுபடுவதாய்த் தெரியவில்லை. தொட்டால் விடுபடமுடியாததுதான் மது என்கிறார்கள். உண்மையோ பொய்யோ தெரியவில்லை. மனதின் வலிமையைப் பொறுத்ததாய் இருக்கலாம். சீ பெரிய குடிகாரர்கள்கூட குடியை விடுவதுண்டு. மனிதனால் அவன் மனதைக் கட்டுப்படுத்தும் செயல்தான் இதுவும். உண்மைதான் . இது அவரவர் மனநிலையைப் பொறுத்தது.

மதுவும் கோபமும் மூளையை இரண்டு விதத்தில் தாக்குகிறது. உணர்ச்சி மேலிட்டால் நல்லது கெட்டது புரியாது போய்விடுகிறது. உணர்வு என்கின்ற சொல் அங்கே மங்கிப் போய்விடுகிறது. உலகத்திலே அனைத்து உயிர்களும் உணர்ச்சி வசப்படுகின்றன. அது இழுத்த இழுவைக்கு இழுபடுகின்றன. அநேக அழிவு அதனாலேயே ஏற்பட்டு விடுகிறது. உணர்ச்சியை மடக்கி . அதற்கு விலங்கிட்டு . உணர்வு பூர்வமாய் ஒருசில மகான்களாலேயே சிந்திக்க முடிகிறது. சிந்திக்க முடிந்தவன் நிட்சயம் இந்த உலகில் மகானாகிவிடுவான். தனு தனது கொடுமைக்கு பக்கபலமாக மதுவையும் சேர்த்துக் கொண்டபோது அவன் இராட்சதனாய் தோன்றுகிறான். அவனுக்காக வினி உள்ளே முடங்கி விடுபவளாகவும் இல்லை. பேசியவுடனே அழுது ஆர்ப்பாட்டம் செய்பவள் , பின்பு மறந்து போகிறாள். இது குழந்தை உள்ளத்தின் உயர்ந்த பண்பாக இருக்க வேண்டும். என்னாலும் அவளை உள்ளே முடங்கிக்கிட! என்று கூறமுடியவில்லை. ஏற்கனவே முடமாக்கப்பட்டவளை மேலும் முடமாக்குவதில் எனக்குச் சம்மதம் இல்லை.

நேரம் எட்டுமணி ஆகிறது. குளிர்காலம் என்றால் வினி இப்படி வெளியே நிற்கமாட்டாள். இப்போது கோடைகாலம். அதுவும் நல்ல வெய்யில் இரவு பதினொன்றுவரையும் இங்கு இருக்கும். அவள் அந்த சுகத்தில் களித்து திளைப்பதற்காய் சென்றுவிட்டாள். ஒன்பது பத்துப் போல் தனு ஏத்திக் கொண்டு வருவான். அவன் வருவதற்குள் வினியை உள்ளே அழைத்து வந்துவிட்டால் வீண்சச்சரவு இருக்காது. இந்த எண்ணம் தோன்றிய பின்பு எனக்கு உள்ளே இருக்கப் பிடிக்கவில்லை. நான் எழுந்தேன். வீட்டுச் சாளரங்கள் எல்லாவற்றையும் திறந்து விட்டிருந்தேன். அதனூடே எட்டிப் பார்க்கும்போது வினி பத்துப்பதினைந்து வீடுகள் தள்ளி போயிருந்தாள். நான் விறுவிறுவெனக் கீழே இறங்கினேன். வினிக்கு இப்போது சுதந்திரத்தில் அதிக நாட்டம் இருக்கிறது. தன்னால் பறந்துவிட இயலுமளவுக்குப் பறக்க வேண்டும் என்கின்ற ஆசை அவள் மனதில் வளர்ந்து கிடக்கிறது.

வாயில் கதவைத் திறந்தபோது மாலினி எதிர்ப்பட்டாள். நாங்கள் பெரிதாக அறிமுகம் செய்து கொள்ள வில்லை. தனு வந்த முதல்நாளே குடித்துவிட்டு வினியை வெருட்டியதால் இவர்களோடு அதிகம் தொடர்பு இருக்க வில்லை. மாலினி என்னைப் பார்த்துச் சிரித்தாள். பதிலுக்கு நானும் சிரித்து வைத்தேன். சிரிப்பிற்குப் பதில் சிரிப்புத்தான். கோபத்திற்குப் பதில் கோபம்தான். முகம் ஒரு கண்ணாடி என முன்னோர்கள் சொன்னது எவ்வளவு உண்மை?

அக்கா?
என்ன ? சிரித்துக் கொண்டே கேட்டேன்.
எங்களால உங்களுக்கு நிறையக் கரைச்சலே.
அவர் உங்க பிள்ளைய வெறியில பேசுறார் என்ன?
நான் எதுவும் சொல்லவில்லை.



பொற்ஸ்வானா:கமலா.வேலுப்பிள்ளை புருணை: கிருஷ்ணராஜா யப்பான்:டாக்டர்.சச்சி ஸ்ரீகாந்தா சிங்கப்பூர்:கிருஷ்ணன் மலேசியா:க.மாணிக்கவாசகர்,க.கணேசன் ,அருண் பேராசிரியர்.இர.ந.வீரப்பன் இந்தோனேசியா: மெடான்;நாகலிங்கம்; மு.சந்திர சேகரன்; .யகார்த்தா:திருமதி.மணி தாய்லாந்து:பாங்கொக்:வே.நாகராஜா புக்கற்:மெ.வேலு;நா.சங்கரன் பர்மா:அப்துல் ரசாக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மூடங்கள்....காரையூரான் இ.தியாகலிங்கம்

ஏனக்கா கதைக்கிறியள் இல்லை? உங்களுக்கு என்னிலும் கோபமோ?
சீ அப்பிடி இல்ல.
அப்ப ஏன் கதைக்கிறியள் இல்லை?
கதைக்க என்ன இருக்கு ? நான் கதைக்கிறதால உங்களுக்கு வேதனைதான் அதிகமாகும். அதாலதான் என்ன கதைக்கிறது எண்டு பேசாமல் நிக்கிறன்.
இங்க மகள அவர் பேசிறதால வாற கஸ்ரத்த தானே சொல்லுறியள்.
ம் ...... அவள் சின்னப்பிள்ளதானே.
எனக்கும் நீங்க சொல்லாமலே வேதனையாத்தான் இருக்குது. அவர் இப்பிடி நடக்கிறத எப்பதான் நிப்பாட்டப் போறாரே? என்ர வயித்தில ஒரு புழுப்பூச்சி எப்பதான் வளரப் போகுதோ?
என்ன சொல்லுறா?
ஏன் இவர் இப்பிடி எல்லாம் நடக்கிறார் எண்டு உங்களுக்குத் தெரியாதெல்லோ?
ஏன் ஏன் இப்பிடி நடக்கிறார்? என்கேள்வியில் பரபரப்பு இருந்தது. ம்... அற்பத்தனமான பரபரப்பு.

ம்...என்னத்தைச் சொல்லுறது அக்கா. எங்களுக்குக் கலியாணமாகிக் கிட்டத்தட்ட எட்டு வருசமாச்சு. முதல்ல நல்லாத்தான் இருந்தவர். இரண்டு மூண்டு வருசத்துக்குப் பிறகு டொக்ரர் மாரிட்ட அங்கயிங்க எண்டு அலைஞ்சாப்பிறகு கொஞ்சம் கொஞ்சமா என்ன அடிக்கடி பேசத் தொடங்கினார். முன்னேக்க அவர் அப்பிடி இல்ல. என்ன நோகப் பேசினதே இல்ல. ஆனா என்னால ஒருபிள்ளைய பெத்துத்தாறத்துக்கு சாண்ஸ் கொஞ்சம் குறைவு எண்ட மாதிரி டொக்ரர்மார் சொன்னாபிறகு அவர் என்னத் திட்டுறது தொடங்கிட்டுது. முதல்ல அடிக்கடி திட்டியவர். பிறகு சில வேளை வாக்குவாதம் வந்திச்செண்டா அது கைகலப்பில முடியும். என்ன செய்யிறது ? என்னால அழத்தான் முடிஞ்சுது. ஆறுதல் அவருக்கு சொல்லவோ என்னால ஆறுதல் அடையவோ முடியேல்ல. என்ர கையாலகத்தனத்தால தானே...

மாலினி விக்கி விக்கி அழுதாள். அவளுக்குள் இவ்வளவு சோகம் இருப்பது பிரமிப்பாய் இருந்தது. இருபத்தோராம் நூற்றாண்டிலும் தமிழ் பெண்களின் நிலையை எண்ணும்போது எனக்குப் பரிதாபமாய் , கவலையாக இருந்தது. நான் அருகே சென்று அவளை அணைத்துக் கொண்டேன். பின்பு கண்ணீரை மெதுவாகத் துடைத்து விட்டேன்.
ம்........ உங்கள வேற கஸ்ரப் படுத்துறன்.
சீ அப்பிடி இல்ல மாலினி.

அவர் கெடத் தொடங்கினார். முதல்ல, கிழமையில ஒருநாள் குடிச்சிட்டு வருவார். நான் என்ன சொல்ல முடியும். அவரின்ர மனசுக்கு அது நின்மதி எண்டாப் பறவாயில்லை எண்டு விட்டன். ஆனா நான் நினைச்சமாதிரி எதுவும் நடக்கேல்ல. வரவர அவர் எப்ப சந்தர்ப்பம் வருகுதோ அப்பவெல்லாம் குடிக்கத் தொடங்கிட்டார். குடிச்சாப் பறவர்யில்ல. என்னப் பேசினாப் பறவாயில்ல. என்ன அடிச்சாப் பறவாயில்ல. ஆனா , இப்ப தான் காணுகிற எல்லாரையும் பேசுறார். விசரன்மாதிரி என்னில இருக்கிற வெறுப்பை, யாரக் கண்டாலும் கொட்டித் தீர்க்கிறார். அதுவும் உங்க பிள்ள பாவம் , பிஞ்சு.

அவளால் அதுக்குமேலே கதைக்க முடியவில்லை சிறிது விக்கினாள். பின்பு தன்னை ஆசுவாசப்படுத்தியவண்ணம் ,

போனவெள்ளி வினியைப் பேசினதுக்காக தர்க்கப்பட்டன். கன்னத்தில அறைஞ்சு போட்டார். எனக்கு கன்னத்தில அறையிறத நான் மறந்திடுவன் , மன்னிச்சிடுவன். எனக்கு அது எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது. நான் பொலிசுக்குப் போகலாம் . இந்தத் தொல்லைக்கு முடிவுகட்டலாம். ஏன் எண்டா அவங்களுக்கு ஏற்கனவே சந்தேகம். ஆனா எனக்கு அது நல்ல முடிவாத் தெரியேல்ல. எனக்கு அவரில நிறையப் பாசம் இருக்கு. நான் அவரை எப்பவும் மனதால நேசிக்கிறன். சிறிது நிறுத்தி என்னை பார்த்தாள்.

ஆனா பாவம் வினி , பிஞ்சு. என்னாலேயே தாங்க முடியல்லயே நீங்கள் எப்பிடி தாங்குவியள். ஆனா ஒண்டக்கா நான் சொல்லுறத தப்பாப் புரிஞ்சுக்காதேங்கோ.
சொல்லு?

உங்க பிள்ளைய நீங்கள் உடல் ஊனம் எண்டு நினைக்கிறமாதிரி இவருக்கு மன ஊனம் , மூளை ஊனம் , எண்டு நினைச்சு மன்னிச்சிடுங்கோ. பிளீஸ் மன்னிச்சிடுங்கோ.

மாலினி கதறினாள். என்கண்கள் என்னை அறியாது பொலுபொலுத்தது. பாவம் . அவள் வேதனை என்னையும் அடித்துப் போட்டது. நான் படுவதெல்லாம் வேதனையா என்கின்ற எண்ணத்தை தோற்றுவித்தது. நான் என்னைச் சமாளித்துக் கொண்டு மீண்டும் கதைக்கத் தொடங்கினேன்.
எப்பிடியோ இஞ்ச பொலிசு கிலிசு அறிஞ்சா பிரச்சனைதானே?
அது ஏற்கனவே மேல்வீட்டுக் காறர் றிப்போட் பண்ணி இருக்கினம். பொலிஸ் ஒருநாள் திடீரெண்டு வந்திட்டுது. அவர் அப்பவும் கைவரிசையக் காட்டிட்டுத்தான் இருந்தார். நல்லகாலம் உடம்பிலதான் அவர்ற்ற அடியள் விழுந்திருந்தது. பொலிசு வந்தோண்ண என்ன எண்டு விசாரிச்சன். அவங்கள் , பக்கத்தீ வீடு றிப்போட் பண்ணி வந்து இருக்கினம் எண்டும், உங்கள இவர் அடிக்கிறாரா எண்டும் கேட்டுச்சினம். நான் அவரக் காட்டிக் குடுக்கேல்ல. அவர்ற்றை பாதிப்பு எனக்கு நல்லாத் தெரியும். நான் அப்பிடி இஞ்ச ஒண்டும் நடக்கேல்ல , நாங்க சும்மா டிஸ்கஸ் பண்ணின்னாங்க எண்டு சொன்னன். அப்ப மெதுவாக டிஸ்கஸ் பண்ணுங்க எண்டிட்டு அவங்க போட்டாங்க. அதுக்குப் பிறகு அவங்கள் வாறேல்ல. அப்ப உனக்கு றிப்போட் பண்ண விருப்பமில்ல.
எப்பிடியக்கா முடியும்?
ம்..............
நீங்கெண்டா செய்வியளா?
தெரியல்ல. அவர் என்ன இப்பிடி நடத்தினதும் இல்ல.
எல்லாருக்கும் அதிஸ்ரம் ஒரே மாதிரி இருக்கிறேல்ல அக்கா.
உண்மைதான். ஆனா உன்ர நிலைமையைப் பாக்கேக்க அவர் உன்ன அடிமைப்படுத்தின மாதிரி எல்லே இருக்கு.
பெண்ணடிமை எண்டுறியளா? அது உண்மைதான். அப்பிடி இருந்தும் நான் அதைப் பெரிசா எடுத்துக்கேல்ல. அப்பிடி நான் நினைக்கிற கட்டம் வந்தா நான் என்ர சுதந்திரத்தை எடுத்துக்குவன் அக்கா.
குட்.!
நீங்க எங்கயோ வெளிக்கிட்ட நீங்கள் போல இருக்கு . உங்கள மினக்கெடுத்திப் போட்டன்.
இல்ல வினிய கூட்டத்தான்.
அப்ப சந்திப்பம்.

கூறிவிட்டு மாலினி தனது வீட்டை நோக்கிச் சென்றாள். நான் அதன்பின்பு சென்று ஒருவாறு வினியை அழைத்துக் கொண்டு வீடு திரும்பிவிட்டேன்.
(முற்றும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உள்ளூராட்சி-தொழில்அமைச்சு

## சொத்துபிரிவுகள் பற்றிய புது சட்டம்

**1998.தை.1இலிருந்து நடைமுறைக்குவருகிறது.**

சொத்துபிரிவுகள் நடைமுறை பற்றிய விதிகள் மாற்றமடைந்துள்ளன. அத்துடன் சொத்தைப் பிரிக்கமுன் கொம்யூனின் முன் அனுமதி பெறவேண்டும்.ஏற்கனவே உள்ள பொதுஉட மைச்சொத்துபிரிவுகளை மீளப்பிரிப்பதாயினும் இதே விதி பொருந்தும்.
சட்டம்: நிர்வாகம்,முகாமை, பொதுஉடமையா ளரின் உரிமைகள்-கடமைகள் பற்றியவிதிகளை கொண்டிருக்கும்.பொதுசெலவுகள் செலுத்தலை உறுதிசெய்ய சட்டஈட்டுரிமை ஒவ்வொருசொத்து பிரிவுகட்கும் அறிமுகமாகும்.
ஏற்கனவே உள்ள பொதுஉடமைகளில் புதிய சட்டத்துடன் முரண்படும், ஒப்பந்தங்கள்,தீர்மா னங்கள்,பிற முடிவுகள் 1999 தை 1இலிருந்து செல்லுபடியாகாது.

சட்டம் பற்றிய மேலதிகவிபரங்களைப் பெற:
உள்ளூராட்சி-தொழில்அமைச்சு,வீடு-கட்டிடபிரிவு
தொலைபேசி:22 24 71 01

-அரசதகவல்சேவையால் வழங்கப்பட்டது. அ.28-97

## அரச வீதித்துறை வீதிஇயக்குனர்

## 1998லிருந்து புதியசாரதிஅட்டை

ஐ.பொ.ஒ.-மாதிரிக்கமைய 5.தை 1998லிருந்து அரசவீதித்துறை-போக்குவரத்துநிலையங்களில் புதியசாரதிஅட்டைகளை வழங்கும்.

**நாம் கவனிக்க வேண்டுவது:**

-பழையசாரதிஅட்டைகள் தொடர்நது செல்லு படியாகும்.புதியசாரதிஅட்டை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை.

-1998இலிருந்து புதியசாரதிஅட்டைபெறுவோர் 1பாஸ்போட் படத்துடன்(கலர் அல்லது கறுப்பு-வெள்ளை)போக்குவரத்து நிலையங்கட்கு செல்க.போக்குவரத்துநிலையம் தற்காலிகசாரதி பத்திரத்தை வழங்கும்.புதியசாரதிஅட்டை, 10நாட்களுள் உங்கள் வீட்டுமுகவரிக்கு அனுப் பிவைக்கப்படும்.

-1998ல் சாரதிஅட்டை வழங்கும்செலவு 165,- குரோணர் ஆகும்.

- 2.தை.1998 வெள்ளியன்று புதியமுறை மாற்ற ம் பற்றியஅலுவல்களால், சாரதிஅட்டைவிசாரிப்பு களை போக்குவரத்துநிலையங்கள் ஏற்காது.

-அரச தகவல் சேவையால் வழங்கப்பட்டது அ.31-97

KOMMUNAL- OG ARBEIDSDEPARTEMENTET

## Ny lov om eierseksjoner

**trer i kraft 1. januar 1998**

Reglene for opprettelse av eierseksjoner er endret. Bl a kreves tillatelse fra kommunen før en eiendom kan seksjoneres. Det samme gjelder ved reseksjonering av eksisterende eierseksjonssameier.

Loven inneholder regler om styring, forvaltning og sameiernes rettigheter og plikter. Det innføres legalpanterett i hver eierseksjon til sikkerhet for betaling av fellesutgifter.

I eksisterene sameier vil avtaler, vedtekter og andre bestemmelser som er i strid med ny lov, opphøre å gjelde 1. januar 1999.

Nærmere opplysninger om loven fås ved henvendelse til Kommunal- og arbeidsdepartementet, Bolig- og bygningsavdelingen, tlf. 22 24 71 01.

Innrykket av Statens informasjonstjeneste A-28/97

**Statens vegvesen**
Vegdirektoratet

## Nytt førerkort fra 1998

Fra mandag 5. januar 1998 utsteder Statens vegvesens trafikkstasjoner nytt førerkort etter EØS-modell.

**Vi gjør oppmerksom på:**

- De gamle førerkortene er fortsatt gyldige. Det er ikke nødvendig å bytte til det nye førerkortet.
- De som får nytt førerkort fra 1998, må selv ha med passfoto (1 stk. farge eller svart/hvitt) til trafikkstasjonen. Trafikkstasjonen utsteder et midlertidig førerbevis, og det nye førerkortet blir sendt til din hjemstedsadresse i løpet av 10 dager.
- Det vil koste kr 165,– å få utstedt førerkort i 1998.
- I forbindelse med omlegging til det nye systemet tar trafikkstasjonene ikke imot henvendelser om førerkort fredag 2. januar 1998.

Innrykket av Statens informasjonstjeneste A-31/97



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



: hovedmål er å drive adopsjonsformidling. Vi er også hjelpeprosjekt i giverlandene.
lutter oss til de prinsipper som er nedfelt i FNs ıekonvensjon, FNs Erklæring om adopsjon og fostring samt Haagkonvensjonen om inter- onal adopsjon.

SØKNAD OM ADOPSJON

Verdens Barn
Bogstadvn. 27 B - 0355 Oslo
Tlf.: 22 93 30 00
Fax.: 22 69 85 55

Noen leser for å få tiden til å gå. Noen leser fordi de er så interessert i noe at de ikke har tid til å la aktuell informasjon gå fra seg. Noen leser for å være orientert om hva som skjer i verden rundt dem. Noen leser fordi kunnskap er makt. Noen leser fordi det du har lært kan ingen ta i fra deg.


**atlantis**

- NORWEGIAN FOUNDATION FOR YOUTH EXCHANGE
Rolf Hofmosgate 18, N-0655 OSLO 6, Norway
Tlf.: +47+2+670043 Telefax: +47+2+686808 Telex: 17 509
Postaccount: 2 47 36 01 Bankaccount: 9050.05.00327 Den norske Handelsbank


Poverty, the multiplier of misery will not
Come to those who speak to everybody, sweet and kind words

Thirukkural-94

**Sumaihal post Boks 10, 5125 Bovågen, NORWAY**

Europakommisjonen
PB 1643 Vika
0119 Oslo

*Nytt fra EU*

Skippergt. 21 - 4600 Kristiansand
Tlf.: 38 02 46 20
Fax.: 38 02 42 57

Inkognitogt. 17 - 0256 Oslo
Tlf.: 22 55 78 60
Fax.: 22 44 62 60

## Journalistkurs

Stiftelsen *Journalists in Europe* har nylig utlyst plasser til neste års kurs om Europa. Programmet varer i åtte måneder og gir en intensiv innføring i europeisk politikk. Programmet er åpent for journalister mellom 25 og 35 år som har minst fire års arbeidserfaring. Videre må man kunne forstå engelsk og fransk og kunne skrive minst ett av språkene. Søknadsfrist er 15. januar neste år, men interesserte journalister bør kontakte organisasjonen snarest for å få søknadspapirer.

**Journalists in Europe**
**35, rue du Louvre**
**F-75002 Paris - Frankrike**
**Tel: +33-1 44 82 20 00**
**Fax: +33-1 45 08 42 32**
**E-mail: europmag@europmag.com**

***I Norge administreres Leonardo av Teknologisk Institutt i Oslo.***

**Tlf.: 22 86 50 00**
**Faks: 22 20 18 01**

## Nye Leonardo-prosjekter

727 av 1.823 søknader til prosjekter under Leonardo da Vinci programmet fikk nylig innvilget prosjektmidler da Europakommisjonen behandlet neste års søknader. Leonardo da Vinci er EUs program for yrkesopplæring og den totale summen for årets tildelinger er på 107,7 millioner ecu. Av disse går 74,8 millioner ecu til pilotprosjekter og 25 millioner ecu til utplassering og utvekslingsprogrammer. Dette gjør at 9.000 studenter og nesten 19.000 ungdommer under opplæring kan delta i opplæringsprogrammer i bedrifter eller opplæringssentra i andre deltagerland. Dette gjelder lærlinger, unge arbeidstakere eller arbeidssøkere og praktikanter.

## Integrasjon av flyktninger

Europakommisjonen vedtok 13. november å støtte 59 pilotprosjekter som skal bidra til å integrere flyktninger i medlemslandene. Prosjektene omfatter blant annet opplæring og utdanning, integrasjon i arbeidsmarkedet, bosetting, veiledning og kulturtiltak. Det var totalt 237 søknader og budsjettrammen er på 10 millioner ecu. Både private og offentlige organer og frivillige organisasjoner har fått støtte. I tillegg til lokale og nasjonale tiltak, er det tildelt midler til felles-europeiske prosjekter. Disse har flere formål:

- forbedre publikums oppmerksomhet og forståelse for flyktningers situasjon og behovet for å integrere dem i samfunnet
- utveksling og spredning av informasjon og erfaringer i forhold til integrasjon av flyktninger
- tiltak for å forbedre frivillige organisasjoners aktivitet og samarbeid
- utarbeide analyser og vurderinger av flyktningers situasjon i EU og medlemsstatenes politikk på området.

Kommissær Padraig Flynn, som har ansvar for sosialpolitikk, sa ved offentliggjøringen av prosjektene at den massive responsen viser et stort behov for tiltak fra EUs side. Siden mange medlemsland står overfor de samme utfordringene, er det særdeles nyttig at EU kan bidra til utveksling av erfaringer og kunnskap. Flynn sa videre at han vil gjøre det han kan for å sikre at EU også kan støtte tiltak på dette området i fremtiden. For ytterligere informasjon og liste over prosjektene som har fått støtte, se Kommisjonens nyhetsdatabase Rapid på Internett. Benytt «guest» som passord og «IP-Press Release (Commission)» som dokument type. Referansenummeret er «IP/97/985».

**http://europa.eu.int/rapid/start/welcome.htm**

EU-INFO

***Publikasjonene kan kjøpes hos:***

NIC Info AS
Tel. : 22 97 45 00
Faks : 22 97 45 45
eller:
J.H. Schulz Information AS
Tel. : (45) 43 63 23 00
Faks : (45) 43 63 19 69


USA

# Au pair i Europa

## for deg mellom 18 og 29 år

SØKNADSSKJEMA

**Send, ring eller fax søknaden til ASSE, Kirkeveien 64 B,0364 Oslo**
**Telefon: 22 46 73 40 Telefax: 22 46 87 90**


**Statens adopsjonskontor**
Boks 8036 Dep. – 0030 Oslo
Tlf.: 22 24 25 91

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விவசாய அமைச்சு

## உணவுப்பொருள்தீர்வை

**தீர்வைஉயர்வு**

**1998.தை.1 இலிருந்து உணவுப்பொருட்களுக்கான நொஸ்க் மூலப்பொருட் கள், இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்கள், அரைவாசி பதப்படுத்தப்பட்ட மூலப்பொருட்களுக்கான தீர்வைவீதம் 0,40வீதத்திலிருந்து 0,60வீதத்துக்கு உயர்த்தப்பட்டுள்ளது.**

**இறக்குமதிசெய்யப்பட்ட முடிவுப்பொருட்கட்கு தீர்வைவீதம் 0,25 இலிருந்து 0,45க்கு உயர்த்தப்பட்டுள்ளது.**

-அரசதகவல்சேவையால் வழங்கப்பட்டது. அ-29-97

---

சமூக-சுகாதாரஅமைச்சு

## திருத்தப்பட்ட மதுச்சட்டம்

**1998 தை 1இலிருந்து செல்லுபடியாகும்**

**1998 தை 1இலிருந்து மதுபானவிற்பனைக்குரிய 2.ஆனி 1989 சட்டத்தின்,16.வைகாசி 1997 சட்ட திருத்தம் நடைமுறைக்குவரும்.**

**11.மார்கழி 1997 மதுபான விற்பனைக்கான புதியசட்டவிதியும் இதே சமயத்தில் நடைமுறைக்குவரும்.**

**சட்டம்,சட்டவிதிகளை பெற்றுக்கொள்ள விரும்புவோர் தொடர்புறுக:**

**சமூக-சுகாதார அமைச்சு,**
**சமூகபிரிவு-1,**
**த.பெ. 8011,டெப்,0030 ஒஸ்லோ**

**தொ.பேசி:22 24 85 01 தொ.நகல் 22 24 27 68**

**சட்டம்,சட்டவிதிகள் இன்ரநெற்றிலும் உண்டு:**

odin.dep.no/shd/publ/publ.html

-அரசதகவல்சேவையால் வழங்கப்பட்டது. அ.30-97

---

LANDBRUKSDEPARTEMENTET

## Næringsmiddelavgift

**Avgiftsøkning**

Med virkning fra 1. januar 1998 vil avgiftssatsen for norske råvarer, importerte råvarer og halvfabrikata som skal benyttes til næringsmidler, økes fra 0,40 % til 0,60 %. For importerte ferdigvarer økes satsen fra 0,25 % til 0,45 %.

Innrykket av Statens informasjonstjeneste A-29/97

---

SOSIAL- OG HELSEDEPARTEMENTET

## Revidert alkohollov

**gjelder fra 1. januar 1998**

Lov av 16. mai 1997 nr 28 om endringer i lov av 2. juni 1989 nr 27 om omsetning av alkoholholdig drikk m v trer i hovedsak i kraft 1. januar 1998. Ny forskrift av 11. desember 1997 om omsetning av alkoholholdig drikk m v trer i kraft samtidig.

Lov og forskrifter fås ved henvendelse til: Sosial- og helsedepartementet, Sosialavdeling I, Postboks 8011 Dep, 0030 Oslo. Tlf.: 22 24 85 01 - Faks: 22 24 27 68.

Lov og forskrifter er også tilgjengelig på Internett: odin.dep.no/shd/publ/publ.html

Innrykket av Statens informasjonstjeneste A-30/97



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**1998 தை 1 இலிருந்து**

# ஓய்வுநேர-சிறு படகுகட்கு புதிய பதிவுக்கோவை

பொலிசாரின் பழைய பதிவுக்கோவைக்கு பதிலாக, சுங்கஇலாகா புதிதாக, மத்திய ஓய்வுநேர-சிறு படகுகள் பதிவுக்கோவையை உருவாக்கியுள்ளது.

படகுஉரிமையாளர் கிட்டியசுங்கஇடம் அல்லது மாவட்டசுங்கஇடத்தை தாமாகவே தொடர்புறுக.

1997ல் சுங்க-தீர்வை இயக்குனரிடமிருந்து நேரடிஅறிவிப்பு கிடைக்காத படகுஉரிமையாளர்கள், தாமாகவே, கிட்டியசுங்கஇடத்தை அல்லது மாவட்டசுங்கஇடத்தை பதிவுக்கடமையுள்ள படகுகளை பதிய தொடர்புகொள்க.

**புதிய பதிவுக் கோவையில் இடம்பெறும் படகுகள்:**

மோட்டாருள்ள சகல விதமான ஓய்வுநேர-சிறுபடகுகள், மோட்டாரற்ற 4.5மீற்றருக்கு கூடிய பாய்ப்படகுகள் , நோர்வேயில் நிரந்தரதுறையுள்ளதாயினும், அல்லது பாவிக்கும் உரிமையாளர் நிரந்தரவதிவிடம் நோர்வேயில் உள்ளவராயினும் பதியவேண்டும். முன்பு பொலிசில் பதிந்திருந்த படகுகட்கும் இது பொருந்தும். பொதுத்துறையில் பாவிக்கப்படும் படகுகளும் பதிவுக்கடமைக்குரியவையே.

**புதிய பதிவு எண்:**

சகல, பதிவுக்கடமைக்குரிய படகுகளும் புதியபதிவுஎண்ணை கொண்டிருக்கவேண்டும். படகுள்ளவரை இந்த எண் தொடரும். இந்த எண் 3எழுத்துக்களையும், 3இலக்கங்களையும் கொண்டிருக்கும்.

அதில் 1ம்எழுத்து பிராந்தியசார்பையும், மீதிஎண் வரிசைகிரமமாயும் ஒதுக்கப்படும்.
உ-ம்: த அஅ012

**மேலதிக தகவல்கள்:**
தொலைபேசிஎண் 815 44 055 ல் , அல்லது கிட்டிய, மாவட்டசுங்கஇடம், சுங்கஇடம், அல்லது, மத்திய ஓய்வுநேர-சிறுபடகு பதிவுஅலுவலகத்தில் (பிரெட்றிக்ஸ்ராட், தொ.பேசி: 69 36 22 91, 92, 93, 94, 96, 97) மேலதிக தகவல்களைப் பெறலாம்.

**மாவட்ட சுங்க இடங்களின் தொலைபேசி எண்கள்:**
ஒஸ்லோ:22 86 09 99, பிரெட்றிக்ஸ்ராட்: 69 36 22 00
கொங்ஸ்விங்கர்:62 82 35 00, ட்றம்மன்:32 20 89 89
சேயன்:35 51 93 00 கிறிஸ்ரியன்சான்ட்:38 12 00 12
ஸ்ராவங்கர்:51 86 86 86 பேர்கன்:55 90 91 00,
துறொண்கைம்:73 88 43 00, புடோ:75 52 15 11
துறொம்சோ:77 60 38 00

**சுங்க-தீர்வை இயக்குனர்**

*-அரச தகவல் சேவையால் வழங்கப்பட்டது. அ. 2 -98*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1998.Jan/Vol.5,Nr.1/ISSN:0805-7443/Etbl.1994/e.post:nsp@c2i.net/Redaktør:

**C-BLAD**

SARVADESA TAMILER

Abonnement :90kr/år

Foreign Subs.:15USD/yr

N.S.PIRABU B.Sc,Dip.Jour.,

L.Hervigsv.69A,3035Drammen,

Norway Tel/Fax.32.813416

Postgiro:05320899453

Norges Tamiltidsskrift for informasjon, kunnskap, kultur og solidaritet.


# Nytt register for fritids- og småbåter

## fra 1. januar 1998

Tollvesenet har etablert Det sentrale fritids- og småbåtregister, et nytt register som erstatter politiets tidligere registre.

**Båteiere må ta kontakt med nærmeste tollsted/ distriktstollsted**

Båteiere som ikke har fått direkte melding fra Toll- og avgiftdirektoratet i 1997, må selv ta kontakt med nærmeste tollsted eller distriktstollsted for å få registrert båter som er registreringspliktige.

**Disse båtene skal inn i det nye registret:**

Alle typer fritids- og småbåter med motor, samt seil-båter uten motor f.o.m. 4,5 meter, som enten har fast havn i Norge eller som blir brukt her i landet av person med fast oppholdssted i Norge. Det gjelder også for de båtene som tidligere har vært registrert hos politiet. Båter i offentlig virksomhet er også registreringspliktige.

**Nye registreringsnumre**

Alle registreringspliktige båter må ha nye registre-ringsnumre, som skal følge båten så lenge den eksisterer. Dette nummeret har tre bokstaver og tre tall der den første bokstaven viser fylkestilhørighet og resten av nummeret blir tildelt fortløpende - eks. T AA012.

**Mer informasjon**

får du på telefon 815 44 055, hos nærmeste distriktstollsted/tollsted eller hos Det sentrale fritids- og småbåtregister, Fredrikstad - tlf. 69 36 22 91/92/93/94/96/97.

**Telefonnumre til distriktstollstedene:**

Oslo - 22 86 09 99
Fredrikstad - 69 36 22 00
Kongsvinger - 62 82 35 00
Drammen - 32 20 89 89
Skien - 35 51 93 00
Kristiansand - 38 12 00 12
Stavanger - 51 86 86 86
Bergen - 55 90 91 00
Trondheim - 73 88 43 00
Bodø - 75 52 15 11
Tromsø - 77 60 38 00



Innrykket av Statens informasjonstjeneste

TOLL Toll- og avgiftsdirektoratet

A-2/98


தமிழர்களை முன்னேற்றம்,ஐக்கியம் கருதி ஒன்றிணைக்கும் நோர்வே தமிழ்ச்சஞ்சிகை!

**Norway Tamil magazine to co-ordinate the Tamils for advancement & solidarity!**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்